Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 30 ஹிஜ்ரி 1428 துல்கதா 12 (15.12.2005) வியாழக்கிழமை இதழ் 79

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

## சுற்றிவளைப்பு, கைதுகள் நிறுத்தப்படாவிடின் படையினர் மீது கடும் தாக்குதல் தொடுப்போம்!

### பொங்கி எழும் மக்கள் படை - கண்காணிப்புக்குழுவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் - படையினர்மீது மீண்டும் கடுமையான தாக்குதல்களைத் தொடுக்க நேரிடும் என பொங்கி எழும் மக்கள் படை - இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக எமது மக்கள் மீது இராணுவ அராஜகங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக யாழ். குடா நாட்டில் எமது தேச விடுதலைக்கும், தமிழ்த் தேசியத்துக்கும் ஆதரவாகக் குரல் கொடுத்த கல்வியாளர்களையும், எமது ஆதரவாளர்களையும் இராணுவமும் அதனோடு இணைந்த ஈ.பி.டி.பி.யும் படுகொலை செய்துவருகிறது.

அதற்குப் பதிலடியாக நாமும் இராணுவத்தின்மீது தாக்குதலைத் தொடுத்தோம். எனினும், தொடர்ந்தும் இராணுவமானது எமது மக்களை அச்சுறுத்தும் வகையில் மக்கள்மீது தாக்குதல்களை நடத்துவதிலும், அச்சுறுத்துவதிலும், சுற்றிவளைப்புக்கள்மூலம் தேடுதல் நடத்தி எமது மக்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அண்மைக்காலப் பகுதிகளில் இராணுவத்தினர்மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களை நாமே மேற்கொண்டோம். கடந்த சில நாட்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் செங்கலடியில் கைது!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - செங்கலடியில் இரண்டு இளைஞர்களை கைக் குண்டுகளுடன் கைதுசெய்திருப்பதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் செங்கலடி பொதுச் சந்தை வீதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும், இவர்கள் களுவங்கேணி மற்றும் இலுப்பையடிச்சேனையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து இரண்டு கைக் குண்டுகள், தங்கநகைகள் மற்றும் இரண்டு மொபைல் போன்கள் கைப்பற்றப்பட்டதாகவும், ஏறாவூர் பொலிஸில் இவர்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# நோர்வே வெளிவிவகார அமைச்சரை மங்கள சமரவீர அவசரமாக சந்திப்பு!

## சமாதான முயற்சிகள் குறித்தே பேசுவார்



கொழும்பு—

வடக்கு - கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் வேகமாக அதிகரித்து வருவதை அடுத்து - சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே வெளியுறவு அமைச்சருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இன்று ஹொங்கொங்கில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் ஹொங் கொங்கில் இன்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜொனஸ் கார்ஸ்ரோரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை கடற்படை கூட்டுப்பயிற்சி நேற்று ஆரம்ப

கொழும்பு—

இலங்கையின் மேற்குக் கடற்பரப்பில் இந்திய - இலங்கை கடற்படைகளின் முதலாவது கூட்டுப் பயிற்சி நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ஐ.என்.எஸ் சுகன்யா, ஐ.என்.எஸ் கிர்பன் ஆகிய போர்க் கப்பல்களுடன் இந்தியக் கடற்படையின் ஹெலிகொப்டர் ஒன்றும் டோனியர் விமானமும் இந்தக் கூட்டுப்பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்றன.

இலங்கைக் கடற்படை
பில் மூன்று போர்க்கப்
ஒரு பீரங்கிப் படகும் ஒரு
தாக்குதல் படகும் இந்த
பயிற்சியில் பங்கேற்றதா
யின் பேச்சாளர் ஜயந்
தெரிவித்தார்.


கடற்படைப் பேச்சா
பெரேரா இது குறித்து
களிடம் பேசுகையில் -

(12 ஆம் பக்கம் ப

## ஜனாதிபதியுடன் இன்று ரணில் முக்கிய சந்திப்பு!

## இரண்டாவது நாளாக நேர் யாழ். குடாநாட்டில் தேடுதல்

# ஜனாதிபதியுடன் இன்று ரணில் முக்கிய சந்திப்பு!



கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

அலரி மாளிகையில் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில்- விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களைத் தொடங்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி மகிந்த கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் சமாதான முயற்சியில் எதிர்க்கட்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டாவது நாளாக நேற்
# யாழ்.குடாநாட்டில் தேடுதல்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் 2 ஆவது நாளாக நேற்றும் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து பெருமெடுப்பில் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் குறிப்பிட்ட பிரதேசங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், அரியாலை, மயிலங்காடு, ஏழாலை ஆகிய பகுதிகளிலும் வடமராட்சியில் கரவெட்டி, மண்டான், பருத்தித்துறை, முனை ஆகிய இடங்களும், தென்மராட்சியில் பல்வேறு இடங்களிலும் சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடத்தப்பட்டது.

அதிகாலை 5.30 மணிக்
மங்களைச் சுற்றி பெருமளவு
ரும் பொலிஸாரும் குவிக்கப்
தும் வீடுகளுக்குள் நுழைந்த ப
இருந்தவர்களின் அடையாள அ
சீலித்ததுடன் இராணுவத்தினர்
கிய குடும்ப அனுமதி அட்டை
யிட்டனர்.

இராணுவத்தினர் வழங்கிய
அட்டை இல்லாத நபர்கள் கடும்

(12 ஆம் பக்கம் பார்

# கதிர்காமரின் ஆசனத்துக்கு டலஸ் அழகப்பெரும நியமனம்

கொழும்பு—

நாடாளுமன்றத்தில் வெற்றிடமாக இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு டலஸ் அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில்பிரேம் ஜயந்த இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு அறிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து நாடாளுமன்றத்தில் இந்த வெற்றிடம் ஏற்பட்டது. டலஸ் அழகப்பெருமவின் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறும் சுசில் பிரேம் ஜயந்த தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரேயை அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன கத்திரி ஆராச்சியை நியமிக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

அவர் சிங்கப்பூர் பயணமாகிய பின்னர் டலஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படை ஹெலி
# அம்பாறையில் தாக்கு



கொழும்பு—

இத்தாலிய பிரதி வெளிவிவகார அமைச்சரை ஏற்றுவதற்காகச் சென்ற விமானப்படையின் எம்.ஐ.17 ஹெலிகொப்டர் - தரையிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலின்போது சேதமடைந்ததாக விமானப்படையின் பேச்சாளர் அஜந்த சில்வா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அறுகம்பை நோக்கிச்சென்றுகொண்டிருந்த போதே நேற்று மாலை 3.10 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com,

Your friend in the skies...

இலங்கையில்
முன்னணி வகிக்
உங்கள் உள்
விமான சேவை.

# குடாநாட்டில் மெல்லக்கற்கும் மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க நடவடிக்கை!

சுதுமலை —

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு விசேட கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த பொதுநலவாய கல்வி நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாண பாடசாலைகளில் தரம் மூன்றில் கல்வி கற்கும் பின்தங்கிய மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு வலயரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

வலயரீதியாக 20 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு பயற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது. வலயரீதியாக இந்தக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேற்படி நிதியத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்படவுள்ளன.

யாழ்.வலயத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், தீவக வலயத்தில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனம், தென்மராட்சி வலயத்தில் அறவழி நிலையம், வலிகாமம் வலயத்தில் பால் நிலைக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பு, வடமராட்சி வலயத்தில் ஊற்று நிறுவனம் ஆகிய அமைப்புகள் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான கல்வித் திட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இந்தத் திட்டம் பரீட்சார்த்தமாக முதல் ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், மாணவர்களின் அடைவுமட்டத்தை கருத்திற்கொண்டு தொடர்ந்து நடத்தப்படுவதுடன், மேலதிகமான கல்வித் தூண்டல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(91)

# நெடுந்தீவு மத்திய சந்தையில் கடையின் கூரை பிரித்து திருட்டு

நெடுந்தீவு —

நெடுந்தீவு மத்திய சந்தை கடைத் தொகுதியில் உள்ள கடையொன்றில் நேற்றுமுன்தினம் இரவு கூரை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒருதொகுதி பொருட்களையும், ஒரு தொகைப் பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்.

காலையில் கடை உரிமையாளர் வழமைபோல கடை திறப்பதற்குச் சென்றபோது கடையின் கூரை ஓடுகள் விலக்கப்பட்டிருந்ததையடுத்து சந்தேகம் கொண்டு கடையிலிருந்த பொருட்களையும், பணத்தையும் பார்த்தபோது அவை திருடப்பட்டமை தெரியவந்தது.

இது தொடர்பாக நெடுந்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்துக்கு உடனே விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, இந்தக் கடைத் தொகுதி கடற்படை முகாம், பொலிஸ் நிலையம், ஈ.பி.டி.பி அலுவலகம் என்பன அமைந்துள்ள பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடற்படைச் சிப்பாய் காணாமற்போனதைத் தொடர்ந்து நெடுந்தீவுப் பகுதியில் இரவுவேளையில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை நடைபெற்றுவருகின்ற நிலையில் இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளமை இப்பகுதி மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (113)

# ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம் —

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

# 5 பிள்ளைகளின் தாயாரை திருமணம் செய்த கணவருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் மனைவி முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

சட்டப்படி திருமணம் செய்து விவாகரத்துப் பெறாத ஐந்து பிள்ளைகளின் தந்தையார் கொழும்பில் இன்னொரு ஐந்து பிள்ளைகளின் தாயாரை சட்டப்படி திருமணம் செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்.நகரப் பகுதியைச் சேர்ந்த இந்த நபருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் மனைவியான ஐந்து பிள்ளைகளின் தாயார் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் தனது கணவர் கொழும்புக்கு சென்ற சமயம் அங்கு ஐந்து பிள்ளைகளின் தாயார் ஒருவரை சட்டப்படி திருமணம் செய்துவிட்டு வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்காகக் காத்திருக்கிறார்.

எனவே அவருக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவை கோரியுள்ளார்.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பாக அவரது மனைவி மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

# கண்ணகை முன்பள்ளியின் கலைவிழாவும் பரிசளிப்பும்

மட்டுவில் —

மட்டுவில் வடக்கு கண்ணகை முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் மட்டு[...]ில் வடக்கு சந்திரமௌலீச வித்தியா[...]ப மண்டபத்தில் இளைப்பாறிய [...]க்காய்வு அத்தியட்சகர் ஆ.சுந்தர[...]ம் தலைமையில் கடந்த திங்கட் [...] இடம்பெற்றது.

[...]வில் வடக்கு கிராம அலுவ[...]மதேவன், முன்பள்ளி குடும்ப [...]லைவி செல்வி முத்துக்குமாரு, பாடசாலை அதிபர் செ.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

(24)

# [...]ரிகையாளர் [...]க கூட்டம்

[...]ங்கை பத்திரிகையாளர் [...]மாதாந்த கூட்டம் இன்று [...]ணிக்கு கொட்டடியிலுள்ள [...]ிமனையில் இடம்பெற[...]

[...]லைவர் சி.கதிர்காமத்[...]மயில் நடைபெறவுள்ள [...]ங்கத்தவர்கள் அனை[...]றாது கலந்துகொள்ளு[...]ர் கோரியுள்ளார். (111)

# சுகாதார கருத்தரங்கு

கிளிநொச்சி —

கற்சிலைமடு பிரதேசத்தில் தியாக தீபம் திலீபனின் மருத்துவமனையில் இன்று தமிழீழ சுகாதார சேவையினரால் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதார கருத்தரங்குகளும், பற்சிகிச்சைப் பிரிவின் பற்சிகிச்சை மற்றும் வாய்ப்புற்றுநோயை இனங்காணுதல் என்பன நடைபெறவுள்ளதால் அப்பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கா.ஓவியன் தெரிவித்துள்ளார்.


# இலங்கை வங்கி பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

ஏற்கனவே விளம்பரப்படுத்தியபடி [...]004 திகதி வரை அடகு வைக்கப்பட்டு [...]டாத நகைகளின் ஏல விற்பனை [...]05 மற்றும் 11.12.2005 ஆகிய திகதிக[...] [...]ங்கை வங்கி யாழ். மேற்தரக் கிளையில் [...]றது.

[...]வ் ஏல விற்பனையின் தொடர்ச்சி [...]ரும் 17.12.2005 சனிக்கிழமையும் [...] 9.00 மணிமுதல் நடைபெறும்.

[...].மேற்தரக்கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
(வட பிராந்தியம் - யாழ்ப்பாணம்)



# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேசசபையினால் இக்ராட் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 16.12.2005 திகதி தொடக்கம் 22.12.2005 திகதி பி.ப 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 23.12.2005 ந.ப 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி - 23.12.2005 பி.ப 2.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருக்கவேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல்வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை, செயலாளர், நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் இடவேண்டும். மறு பிரதியை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு 2 ம் பந்தியில் குறிப்பிட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற்வரி |
|---|---|---|---|---|
| 01 | கொக்குவில் சந்தை எல்லைச்சுவர் அமைத்தல் | 6020.00 | 500.00 | 75.00 |
| 02 | கோணாவளை வீதி மீள் தாரிடல் திருநெல்வேலி | 2100.00 | 500.00 | 75.00 |
| 03 | கேணியடி பொற்பதி வீதி கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் | 1280.00 | 500.00 | 75.00 |
| 04 | முதலியார் வீதி கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் | 1700.00 | 500.00 | 75.00 |
| 05 | பிரம்படி 2 ம் குறுக்கு வீதி கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் | 2000.00 | 500.00 | 75.00 |
| 06 | கோணாவளை வைரவர் வீதி கல்லிட்டுத் தாரிடல் கொக்குவில் | 6000.000 | 500.00 | 75.00 |
| 07 | மகாத்மாஜி வீதி 2ம் முறை தாரிடல் திருநெல்வேலி | 250.00 | 500.00 | 75.00 |
| 08 | வன்னியசிங்கம் வீதி கல்லிட்டுத் தாரிடல் கோண்டாவில் | 4250.00 | 500.00 | 75.00 |
| 09 | கொக்குவில் உப அலுவலக கொல்களம் திருத்தம் | 5000.00 | 500.00 | 75.00 |
| 10 | கொக்குவில் உப அலுவலகம் திருத்தம் | 1500.00 | 500.00 | 75.00 |
| 11 | கேணியடி வீதி கல்லிட்டுத் தாரிடல் கோண்டாவில் | 3220.00 | 500.00 | 75.00 |
| 12 | திருநெல்வேலி குடியேற்றத் திட்டம் நீர் தாங்கி அமைத்தல் | 5100.00 | 500.00 | 75.00 |

நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி
14.12.2005

பொன்னையா வைரமுத்து
செயலாளர்
நல்லூர் பிரதேசசபை.

(சி-4916)

# இலங்கை அரசு விரிக்கும் வலைக்குள் இந்திய அரசு செயற்படக் கூடாது!

## வைகோ கவலை



கொழும்பு —

இலங்கை - இந்திய இராணுவங்கள் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது தொடர்பாக - இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகப் பொதுச்செயலாளர் வைகோ தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ் நெட் இணையத்தளத்துக்கு வை.கோ அளித்துள்ள பேட்டியில் -

யாழ்.பலாலி விமானத் தளத்தை சீரமைப்பது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது குறித்து எனது கவலையை இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் திங்கட்கிழமை தெரிவித்தேன்.

இந்திய செய்திகள் குறித்து தான் ஆராய்ந்து வருவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அண்மைக்காலமாக நடைபெற்று வரும் நிகழ்வுகளை உன்னிப்பாக கவனித்து வருகிறேன். இந்த விடயங்களில் தமிழர்களின் கவலைகளை இந்திய அரசுக்கு விளக்கியுள்ளேன்.

இதியத் தலைவர்களிடம் தமிழர்களின் கவலை குறித்து நான் தெரிவித்த போதெல்லாம் இலங்கையுடன் இராணுவ ஒப்பந்தத்தையோ, இராணுவ நிலைகளின் மறுசீரமைப்புத் திட்டங்களையோ அவர்கள் நிராகரித்தே வந்துள்ளனர்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவைச் சிக்கவைக்க கொழும்பு திட்டமிடும் சதி வலையில் இந்தியா சிக்காது என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

தென்னிந்திய தளபதி லெப். ஜெனரல் தாக்கரின் இலங்கைப் பயணம் குறித்தும், இந்திய கிழக்குப் பிராந்திய தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தாவின் பயணம் குறித்தும் இந்திய அமைச்சரிடம் பேசினேன்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பலாலி விமான தள சீரமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதே எனது கடுமையான ஆட்சேபனையை இந்திய அரசிடம் தெரிவித்தேன். இந்த விமான தளம் சீரமைக்கப் பட்டால், அது தமிழர்கள் மீது குண்டு வீசுவதற்குத்தான் பயன்படும் என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

மேலும், நவாலி தேவாலயத்தின் மீது இலங்கை இராணுவம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான அகதிகளைக் கொன்று குவித்த போது, மறைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் உள்ளிட்ட சர்வதேசத் தலைவர்கள் தெரிவித்திருந்த கண்டனங்களையும் இந்திய அரசிடம் எடுத்துக் கூறினேன்.

இலங்கை இராணுவத்துக்கு ஒரு சிறு உதவி செய்தாலும், அது தமிழர்களுக்கு எதிரான போருக்கு உதவுவதாகவே இருக்கும் என்றும், அதை நியாயப்படுத்த முடியாது என்றும் தெரிவித்திருக்கிறேன்.

கடந்த நவம்பர் 28ஆம் நாளன்று இந்திய தலைமை அமைச்சர் மன்மோகன்சிங்கிடமும், 29ஆம் நாளன்று இந்திய பாதுகாப்பு அமைச்சரிடமும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விரிவாக விவாதித்தேன். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா வருவதற்கு முன்னதாக மீண்டும் இந்தியத் தலைவர்களை நான் சந்திக்கவுள்ளேன்.

இந்திய - இலங்கை இராணுவ கூட்டுப் பயிற்சிநடவடிக்கைதொடர்பாகவும், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் விளக்கம் கோரினேன். பாகிஸ்தான் தவிர்ந்த தெற்காசிய நாடுகள் பலவற்றுடன் மேற்கொள்ளும் ஒரு கூட்டு நடவடிக்கை இது என்று பிரணாப் முகர்ஜி கூறினார்.

இலங்கையின் ஜனாதிபதி மற்றும் அவரது கூட்டணிக் கட்சியினர் இந்தியா குறித்து தெரிவித்துவரும் கருத்துக்களை நாம் ஏற்கவில்லை. நோர்வேயை ஓரம் கட்டிவிட்டு, இந்தியாவை இழுப்பதற்கான அந்தப் பேச்சுக்கள் குறித்து இந்தியத் தலைவர்கள் கவனமாகவே உள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வே அனுசரணையாளராக மிகச் சிறப்பாக பணியாற்றியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய அரசியல் கட்சியின் இதர தலைவர்களுடன் நான் விரைவில் சந்தித்து விளக்கம் அளிக்க உள்ளேன். இலங்கையும், சீனாவும், பாகிஸ்தானும் தளம் அமைப்பதைத் தடுக்க இந்தியா தலையிட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நிச்சயம் தமிழர்களுக்கு எதிரானதாகத்தான் அது அமையும். இந்தியாவில் உள்ள தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள்கொடி உறவு உள்ளது. இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவில் உள்ள தமிழர்கள் அக்கறையோடு உள்ளார்கள்.

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கடந்த 1986ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக இந்தியாவைச் செயற்பட வைத்தார். அதே செயற்பாட்டை இப்போதைய அரசும் மேற்கொள்கிறது. அந்த நிலைப்பாட்டினால் இலங்கைத் தமிழர்களுக்கும், இந்தியாவுக்குமிடையே இடைவெளி ஏற்பட்டுவிட்டது.

இலங்கைப் பிரச்சினையின் அடிப்படையான தமிழர் தாயகத்தை பகிரங்கமாக நிராகரிப்பது என்பது மறைந்த முன்னாள் இந்திய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் மேற்கொண்ட உறுதியான நிலைப்பாட்டுக்கு நேர்முரணானது. தமிழர் தாயகக் கோட்பாடு திம்பு பேச்சுவார்த்தையில் ஏற்கப் பட்ட ஒன்று.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவி ஏற்றபோது அவரது கூட்டணியினரான சிங்களர் தீவிர வாதக் கட்சிகளான - ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். கடந்த 50 ஆண்டுகாலமாக தங்களது தாயகத்திலே வாழ்கிற தமிழர்களை நசுக்கி ஒடுக்க வேண்டும் என்பதுதான் சிங்கள தேசியவாதிகளின் கருத்து. இலங்கையின் இந்தச் சிந்தனையோட்டத்தை இந்தியத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பது மிகவும் ஆபத்தான கொள்கை. இலங்கை அரசு விரிக்கும் வலையில் சிக்கி இந்தியா தரகர்களாக செயற்படக் கூடாது. தமிழர் தலைவர்களுடனான ஒப்பந்தங்கள் அனைத்தையுமே சிங்கள அரசுகள் நிராகரித்தே வந்திருக்கின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட மனிதாபிமான அடிப்படையிலான சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு நேர்ந்த கதி என்ன? இந்த மனிதாபிமான கட்டமைப்பை சிறிலங்கா நீதித்துறை தடுத்து நிறுத்துமானால், தமிழர்களது எந்த உரிமையை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள்?

இலங்கைத் தீவிலே போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. தங்களுக்குச் சாதகமாக இந்தியாவை வளைக்க இலங்கை முயற்சிப்பது மிக ஆபத்தானது.

இரு நாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் உருவாக்க நினைக்கும் இராணுவ ஒப்பந்தத்தை இந்தியத் தலைவர்கள் முன்னெடுக்கக் கூடாது.

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரை யூதக் குடியேற்றங்களிலே என்ன நடக்கிறது என்பதை நான் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறேன். ஒரு இனத்தினது தாயகத்திலே ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டால், அதற்கு ஏற்படும் விளைவு என்ன என்பதற்கு உலகமே சாட்சியாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறது. அதை நியாயப்படுத்த முடியாது. பிரச்சினை என்றால் தீர்வு காண வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு உரியதீர்வு காண இலங்கை முன்வரவேண்டும். இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் கொள்கைகள் சர்வதேச சமூகம் மற்றும் இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# படையினருக்கு எதிராக 267 குற்றச்சாட்டுக்கள்!

கொழும்பு —

லஞ்சம், ஊழல், மோசடி மற்றும் முறையற்ற வகையில் சொத்துச் சேர்த்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முப்படை மற்றும் பொலிஸைச் சேர்ந்த 60 உயரதிகாரிகள் உட்பட 267 பேருக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்று வருவதாக லஞ்ச ஊழல் தடுப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதில் பொலிஸாரே அதிக குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர். 235 பொலிஸாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

இராணுவத்தைச் சேர்ந்த 26 பேருக்கு எதிராகவும், கடற்படையைச் சேர்ந்த ஐவருக்கு எதிராகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக லஞ்ச ஊழல் தடுப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தேசியப் பட்டியலுக்கு ஆனந்த சங்கரியின் பெயரைப் பரிந்துரைத்துள்ளார் சந்திரிகா

கொழும்பு —

நாடாளுமன்றத்தில் லக்ஷ்மன் கதிர்காமரின் ஆசனத்துக்கான தேசியப் பட்டியலில் தெரிவு செய்ய வீ.ஆனந்தசங்கரியை சந்திரிகா குமாரதுங்க பரிந்துரைத்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைதிரிபால சிறிசேன இது தொடர்பாக கூறியதாவது -

கதிர்காமரின் ஆசனத்துக்கு டல்லஸ் அழகப் பெருமாள், சந்தனா கத்திரராச்சி, ரெஜினோல்ட் கூரே, வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

வீ.ஆனந்தசங்கரியின் பெயரை கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பரிந்துரைத்துள்ளார். இது விடயத்தில் எதிர்வரும் வாரம் இறுதி முடிவெடுக்கப்படும்.

கடந்த திங்கட்கிழமை மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியினரது ஆலோசனைக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர் கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது என மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கு புதிய மென்பொருளால் ஆபத்து!

கொழும்பு —

நாட்டின் முக்கிய நபர்கள் பயணிக்கும் இடங்கள் மற்றும் பாதைகளை கையடக்கத்தொலைபேசியூடாக சோதனையிடக் கூடிய மென்பொருட்களை தனியார் நிறுவனம் உரிய அனுமதியின்றி நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

இந்த மென்பொருளை கையடக்கத் தொலைபேசியில் பொருத்தினால் குறித்த நபர் பயணிக்கும் இடங்கள் மற்றும் பாதைகளை அந்த நேரத்துடன் பெற்றுக்கொள்ளமுடியும். பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கு இந்த மென்பொருள் பெரும் பிரச்சினையாகியுள்ளது.

முக்கிய பிரமுகர்களிடம் இந்த மென்பொருள் பொருத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இல்லாவிடினும், அவருடன் செல்லும் பாதுகாப்புப் படையினரேனும் அந்த மென்பொருளுடனான தொலைபேசியைப் பயன்படுத்தினால் அவர்களின் பயணத்தைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

பரீட்சார்த்த நடவடிக்கைக்காக இத்தயை மென்பொருளை இலங்கைக்கு அந்தத் தனியார் நிறுவனம் கொண்டுவருவதற்கு தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியிருந்தது.

எனினும், தற்போது பல்வேறு தனியார் நிறுவனங்கள் அவற்றை இலங்கையில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளன.

இது சட்டவிரோத செயல் என்பதால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

# தார்மீக அரசியல் நெறிமுறையை பின்பற்றவே மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்துள்ளனர்!

## நந்தன குணதிலக்க தெரிவிப்பு

கொழும்பு —

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், அவரை அரச தலைவராக்க உதவிய கூட்டணிக் கட்சியான ஜே.வி.பிக்கும் இடையேயான மோதல் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக வெளிப்பட்டது.

மகிந்தவின் சிந்தனைகள் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் ஜே.வி.பியின் முக்கிய தலைவரும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவருமான நந்தன குணதிலக்க பேசியதாவது-

தார்மீக அரசியல் நெறிமுறை களைப் பின்பற்றவேண்டும் என்பதற்காகத்தான் மகிந்தவுக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். ஆனால் அதற்கான வாய்ப்பு [illegible]போது இல்லை என்று தெரிகிறது. கூடுதல் எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயர் பதவிகளி[illegible]நிய மிக்கப்பட் டுள்ளமை மக்களின் விருப்பங்களுக்கு எதிரானது.

ஒற்றையாட்சியைக் காப்பாற்றவும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காகவும் மட்டும் மக்கள் மகிந்தவுக்கு வாக்களிக்க வில்லை. அரசியல் கலாசார சீர மைப்புக்கும் தான் வாக்களித் துள்ளனர். ஆனால், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற ஒரு அடியைக் கூட மகிந்த அரசாங்கம் எடுத்து வைக்கவில்லை. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தார் மீகக் கட்டுப்பாடுகளை மீறி ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து அமைச்சுப் பதவிகளைக் கைப்பற்றியுள்ளனர். இத்தகைய நபர்கள் மக்களுக்குக் கடமையாற்றுவதைவிட, தங்கள் நலனையே முக்கியம் எனக் கருதுகின்றனர்.

அழுத்தங்கள், உள் முரண்கள் இருந்தாலும், மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சரவையைக் குறைப் பார் என்று ஜே.வி.பி. நம்புகிறது. இது போன்று உறுதியான நடவடிக்கைகள் மூலமே மக்களுக்கு சரியான செய்தியைச் சொல்ல முடியும். மக்கள் நலனுக்குத் தான் அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டுமே தவிர, தனி நபர்களின் சுயவிருப்பங்களுக்கு அல்ல.

80இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக - அமைச்சரவை அந்தஸ் தற்ற அமைச்சர்களாயிருப்பது மக்களின் விருப்பத்துக்கு எதிரானது.

ஒரு அமைச்சர் 14 மில்லியன் ரூபா மதிப்புக்கு வாகனம் ஒன்றை வாங்கியுள்ளார். இது மக்களின் விருப்பத்தை கீழே போட்டு மிதித்துள்ள செயல். இதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது. மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த எங்களுக்கு இது தொடர்பில் கேள்வி எழும்பும் உரிமையும், கடமையும் உண்டு.

இந்தப் பணத்தை எங்களிடம் கொடுத்திருந்தால் பாணந்துறையில் 3 மாடி பாடசாலையை கட்டியிருப்போம் அல்லது பொல்கொட கால்வாயை 5 கிலோ மீற்றர் தூரத்துக்குப் புனரமைப்புச் செய்திருப்போம். சில அமைச் சர்கள் மக்களுக்கு சேவையாற்று வதில் ஈடுபாட்டோடு உள்ளனர். அத்தகைய அமைச்சர்களை ஜே. வி.பி.ஆதரிக்கும் அதே நேரத்தில், மற்றவர்களை அம்பலப்படுத்துவோம்.

பெரிய தொழில் நிறுவனங்களிடமிருந்து 13 ரூபாவுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை வாங்குகிறது. சிறு மின் உற்பத்தியாளர்களிடமிருந்து 6 ரூபாவுக்கு ஒரு யூனிட் மின்சாரம் வாங்கவும் வழியிருக்கிறது.

ஆனால், பெரிய நிறு வனங்களுடன் சில அரசியல் வாதிகளுக்கு உள்ள தொடர்பால் பெருந்தொகைக்கு அரசாங்கம் மின்சாரத்தை வாங்குகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு, வடக்கு - கிழக்கு மக்களுக்குமான மீளமைப்புப் பணிகளை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும். ஆழிப்பேரலை பாதிப்பு ஏற்பட்டு ஓராண்டு ஆகிவிட்ட நிலையில், ஆயிரக்கணக் கான மக்களினது அடிப்படைத் தேவைகள் கூடப் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்தக் குறைபாடு கள் இருந்த போதும், இரத்மலானை மற்றும் அம்பாந்தோட்டை மக்கள் மகிந்தவுக்கே வாக்களித்துள்ளனர்.

தற்போது அந்த மக்க ளின் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டமைக்கும் நடவடிக்கைகளை மகிந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# இலங்கையுடனான 2ஆவது டெஸ்ட்; 188 ஓட்டங்களால் இந்தியா வெற்றி



புதுடெல்கி —

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையில் புதுடெல்கியில் நடைபெற்று முடிந்த 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 188 ஓட்டங்களால் இலங்கையைத் தோற்கடித்து 1:0 என முன்னிலை பெற்றது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 123 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ஜெயவர்த்தன 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தார்.


5ஆம் நாளான நேற்று இலங்கை அணி தொடர்ந்து ஆடியது. 6ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக முபாரக் களமிறங்கினார். அவரும் ஜெயவர்த்தனவும் அணியின் சரிவைத் தடுத்து நிறுத்துவார்களென எதிர்பார்க்கப்



பட்டபோதிலும், அணியின் ஓட்ட எண்ணிக்கை 133ஆக இருந்தபோது 3 ஓட்டங்களைப் பெற்றிருந்த முபாரக், அகர்கரின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதனையடுத்து டில்ஷான் இணைந்தார். உணவு இடைவேளைக்குப் பின்னரும் இருவரும் தொடர்ந்து ஆடினர். எனினும், ஓட்ட எண்ணிக்கை 199ஆக இருந்தபோது 65 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்றிருந்த டில்ஷான், கும்ளேயின் பந்தில் போல்டானார்.

இதனையடுத்து சமிந்த வாஸ் இணைந்தார். அணி 209 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 142 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் ஜெயவர்த்தன தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இது அவரது 25ஆவது அரைச்சதமாகும். இந்த ஜோடி சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில், அணி 243 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.



இதில் 164 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயவர்த்தன, ஹர்பஜன் சிங்கின் பந்தை காம்பீரிடம் பிடிகொடுத்தும், 36 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமிந்த வாஸ், கும்ளேயின் பந்தில் ஹர்பஜனிடம் பிடிகொடுத்தும் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து அணி 247 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் கடைசி விக்கெட்டாக 2 ஓட்டங்களைப் பெற்றிருந்த முரளிதரன், ஹர்பஜனின் பந்தை டோனியிடம் பிடிகொடுத்து




ஆட்டமிழந்தார்.

இதனால் இலங்கை அணி 91.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால், 188 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் கும்ளே 4, ஹர்பஜன் 3, அகர்கர் 2, பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தியா தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 290 ஓட்டங்களையும், 2ஆவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 375 ஓட்டங்களைப்



பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இலங்கை தனது முதல் மற்றும் இரண்டாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து முறையே 230, 247 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஆட்டத்தின் நாயகனாக 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அனில் கும்ளே தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறும்.

## இன்றைய போட்டியில் அப்ரிடி இடம்பெறுவார்



கராச்சி —

இங்கிலாந்து அணிக்கெதிராக இன்று கராச்சியில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் அதிரடி ஆட்டக்காரரான அப்ரிடி இடம்பெறுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து அணிக்கெதிராக கடந்தமாதம் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில், துடுப்பாட்டம் செய்யும்போது ஆடுகளத்தைச் சேதப்படுத்தினாரெனத் தெரிவித்து அப்ரிடிக்கு டெஸ்ட் போட்டி ஒன்றிலும், இரண்டு சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாட ஐ.சி.சி தடை விதித்திருந்தது.

இவரது போட்டித் தடை நீங்கியதை அடுத்து இவர் இன்று நடைபெறவுள்ள போட்டியில் விளையாடுவாரெனவும், இவர் தமது அணிக்கான துடுப்பாட்டத்தையும், பந்துவீச்சையும் மேலும் பலப்படுத்துபவரென அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்தார்.

இதனிடையே அக்தர் மற்றும் சகலதுறை வீரர் சொகைப் மலிக் இருவரும் வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்து குணமடைந்துள்ளதனால், இன்றைய போட்டியில் விளையாடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.


## இலங்கையுடனான மூன்றாவது டெஸ்ட் இந்திய அணியிலிருந்து கங்கூலி நீக்கம்

புதுடெல்கி —

இலங்கை அணிக்கு எதிராக எதிர்வரும் 18ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறவுள்ள மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இந்திய அணியிலிருந்து முன்னாள் அணித் தலைவர் கங்கூலி நீக்கப்பட்டுள்ளார்.

டெல்கியில் நடந்துமுடிந்த இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - கங்கூலி முதல் இனிங்ஸில் 40, இரண்டாவது இனிங்ஸில் 39 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

கங்கூலியை அணியிலிருந்து



நீக்கியதன் மூலம், அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவிற்கு வந்துவிட்டதாக அர்த்தப்படாதென இந்திய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் கிரண்மோரே தெரிவித்தார். அத்துடன், கங்கூலிக்கான கதவுகள் இன்னமும் மூடப்படவில்லையெனவும் தெரிவித்த அவர், இந்திய அணி தெரிவாளர்கள், கங்கூலியை நீக்குவதற்கு காரணம், அவர் அணியில் ஆறாவது வீரராக களமிறங்கி நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்பதாகும்.

எமக்கு தற்போது மத்திய வரிசையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடும் யுவராஜ் சிங், ஃகைவ் போன்ற வீரர்களே தேவை. ஏனெனில் எமது மத்திய வரிசை மிகவும் பலம் வாய்ந்ததாகுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு இந்திய அணிக்கு வாசிம் ஜபார் மீள அழைக்கப்பட்டுள்ளார். இவர் 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டுவரை இந்திய அணிக்காக ஏழு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அத்துடன், காய்ச்சல் மற்றும் தொண்டைப் புண்ணால் அவதிப்பட்ட ஷேவாக், குணமடைந்ததால் அவரும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இதனிடையே, அடுத்தமாதம் பாகிஸ்தான் செல்லவுள்ள இந்திய அணிக்கும், பெப்ரவரி மாதம் இந்தியா வரவுள்ள இங்கிலாந்து அணிக்கெதிராகவும், இந்திய அணியின் கப்டனாக ராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மோதவுள்ள இந்திய அணி வருமாறு -

ராவிட் (கப்டன்), ஷேவாக், கௌதம் காம்பீர், வாசிம் ஜபார், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன், யுவராஜ் சிங், மொகமட் கைவ், இர்பான் பதான், மகேந்திர டோனி (விக்கெட் காப்பாளர்), அஜித் அகர்கர். ஆர்.பி. சிங், அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக்.

## கலகக்காரர்களின் விளையாட்டாக கிரிக்கெட்டை மாற்றவேண்டாம்

### ஐ.சி.சி – வீரர்களுக்கு எச்சரிக்கை

லாகூர் —

கிரிக்கெட்டை கலகக்காரர்களின் விளையாட்டாக மாற்றாதீர்கள் என வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈசான் மணி.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி லாகூரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அந்த ஆட்டத்தைத் காணவந்த மணி, நிருபர்களிடம் கூறியதாவது -

சர்வதேச போட்டிகளின்போது வீரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுவது குறித்து அதிகமான குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. அதை, தவிர்ப்பதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை முயற்சி மேற்கொண்டு வருகிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அம்மாதிரியான வீரர்கள் கலகக்காரர்களின் ஆட்டமாக கிரிக்கெட்டை மாற்றிவிடாதீர்கள் என்பதுதான்.

நடுவர்களுடனோ, வீரர்களுடனோ வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக 2001ஆம் ஆண்டு நெறிமுறை வகுக்கப்பட்டது. களத்தில் மட்டுமல்லாது அதற்கு வெளியிலும் அம்மாதிரியான செயல்களில் ஈடுபடுவோரை இடைநீக்கம் செய்வதுடன், அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.


கிரிக்கெட் விளையாட்டு, அதன் மகத்துவத்துடன் விறுவிறுப்புடன் விளையாடும் ஆட்டமாக இருக்க வேண்டும் என்பதுதான் ஐ.சி.சியின் இலட்சியமெனத் தெரிவித்தார்.

இதற்கிடையே டுபாயிலுள்ள தமது தலைமையகத்திலிருந்து வாக்குவாதத்தில் அதிகம் ஈடுபடுபவர்களது பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

அதில், அவுஸ்ரேலியாவும், தென்னாபிரிக்காவும்தான் அந்தக் குற்றத்தில் அதிகமாக ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விரு அணிகளும் இந்த மாத இறுதியில் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர் முதல் இதுவரை 8 வீரர்கள், அதிகாரிகள் வாக்குவாதத்தில் ஈடுபடும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளனர். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு மடங்கு அதிகமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த மூன்று ஆட்டங்களில் கெவின் பீற்றர்சன் இல்லை



லாகூர் —

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, வீரர்களின் காயத்தால், நெருக்கடி நிலையில் சிக்கியுள்ளது. இறுதியாக காயத்துடன் இங்கிலாந்து திரும்பியிருப்பவர் அதிரடி ஆட்டக்காரர் கெவின் பீற்றர்சன்.

கெவின் பீற்றர்சன் விலாப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால், இங்கிலாந்து திரும்பியுள்ளதால், பாகிஸ்தானுக்கு எதிரான இறுதி மூன்று ஒருநாள் போட்டிகளிலும் விளையாடமாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.


பீற்றர்சன், காயத்தால் நாடு திரும்பியதையடுத்து - அவரது இடத்திற்கு வேறெவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த நேரத்தில் அணியிலிருந்து விலகிக் கொள்வதையிட்டு எனக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது. எனக்கு அணியைவிட்டுச் செல்ல முடியாமல் உள்ளது. ஆனால், எனது வலி அதிகமாகியதை அடுத்து நான் முழுநேர ஓய்வு பெறவேண்டியுள்ளதென பீற்றர்சன் தெரிவித்தார்.

ஏற்கனவே இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோண், முழங்கால் வலியாலும், சுழற்பந்து வீச்சாளர் அஸ்லி ஜைஸ்ல்ஸ் இடுப்பு வலியாலும் அணியில் இடம்பெறாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

## 11000 ஓட்டங்களைக் கடந்து இரண்டாமிடத்தில் இன்சமாம்



லாகூர் —

இங்கிலாந்து அணிக்கு எதிராக லாகூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் - பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் உல்-ஹக் ஒருநாள் போட்டிகளில் 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் இன்சமாம் 16ஆவது ஓட்டத்தைப் பெற்றபோது - 11 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

முதலிடத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 13 ஆயிரத்து 909 ஓட்டங்களுடன் இருக்கிறார். ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை எடுத்தவர்கள் -

| வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | நூறுகள் | அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| சச்சின் | 358 | 13909 | 38 | 186 |
| இன்சமாம் | 348 | 11015 | 10 | 137 |
| ஜெயசூர்ய | 345 | 10207 | 18 | 189 |
| கங்கூலி | 279 | 10123 | 22 | 183 |

# தமிழ் மக்களின் பாரம்பரிய விழுமியங்கள் விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்



தமிழர் தம் பாரம்பரிய கலை பண்பாட்டு விழுமியங்கள் சிறுவர் கலை விழாக்கள் மூலம் வெளிக் கொணரப் பட்டு, தமிழ்த் தேசிய விடு தலைப் போராட்டம் வலுப்பெற உதவுகின்றது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

மட்டுவில் கண்ணகை முன் பள்ளிச் சிறார்களது வருடாந்த கலைவிழாவில் பிரதமவிருந்தின ராகக் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- அழிந்து செல்கின்ற தமிழர் களின் கலைவடிவங்களை இன்று இந்த இளஞ்சிறார்களது கலை விழாவில் கண்டு இன்புற்றேன். போதிய வசதிகள் எதுவுமின்றி வெறுந்தரையில் அமர்ந்து கல்வி கற்கும் இந்த இளமொட்டுக்கள் வெளிப்படுத்திய திறமையைப் பாராட்டுகிறேன்எனக்கூறியதுடன்,

முன்பள்ளிச் சிறார்களுக்கும், முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் உரிய நவீன வசதிகளை ஏற்படுத் திக் கொடுப்பதற்கு தான் அடுத்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியி லிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய வுள்ளதாகத் தெரிவித்தார்.

சாதாரண பொது மக்களா கிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, ஆலயத்திருவிழா போன்றவற்றுக்குச் செலவிடும் ஆடம்பரச் செலவுகளில் ஒரு பகுதியை முன்பள்ளிச் சிறுவர் களது கல்வி வளர்ச்சிக்காகச் செலவு செய்ய முன்வரவேண் டும். முன்பள்ளிகளுக்கு நவீன ஒலி வாங்கிகள், கணினிகள், ஆங்கில, தமிழ்ப் பாடங்கள் கொண்ட இறுவெட்டுக்கள், கார்ட்டூன் திரைப்படங்கள் என்ப னவற்றை கொள்வனவு செய்து வழங்குவதன் மூலம் சிறார்களது திறனை மேம்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித் தார். கடந்த திங்கட்கிழமை மட்டுவில் வடக்கு சந்திரமௌ லீச வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தி யட்சகர் ஆ.சுந்தரலிங்கம் தலைமை தாங்கினார்.

இங்கு கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற் றிய மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் க.வாமதேவன் தன துரையில் -மழலைகள் பெற் றாராகிய எமது ஒவ்வொரு அங்க அசைவுகளையும் மிக அவதானத்துடன் கண்காணித்து விளங்கிக் கொள்வதால் நாம் மிக நல்ல பழக்கங்களையே கொண்டி ருத்தல் வேண்டும். எம்மைப் பார்த்து குழந்தைகள் நற்பழக் கங்களைக் கைக்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறுவர்களது பல்வேறு கலை நிகழ்வுகளும், மழலைகளுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. கண்ணகை முன் பள்ளிச் சிறார்களது அபிநயப் பாடல் நிகழ்வு -முன்பள்ளிக் குடும்ப மட்ட, பிரதேச மட்ட, வலய மட்டப்போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று ஆனையிறவு சிறப்புக்கலையரங் கிலும் பங்குபற்றி, வெற்றியுடன் திரும்பியது என்பதும் குறிப்பிடத் தக்கது. (24)

# அரச ஊழியருக்கு அடுத்த ஆண்டுக்கான சம்பளம் வழங்கும் தினங்கள் அறிவிப்பு!

யாழ்ப்பாணம் —

அரச ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டில் மாதாந்தம் வழங்கப் படும் சம்பளம் மற்றும் முற்பணம் வழங்கும் திகதிகள் திறைசேரி யின் பிரதிச் செயலாளரால் அறி விக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24 ஆம் திகதி யிட்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தின்படி, அடுத்த ஆண் டில் வழங்கும் திகதிகள் வரு மாறு-

ஜனவரி, மே, ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் 25 ஆம் திகதியும், பெப்ரவரி, மார்ச், நவம்பர் ஆகிய மாதங்களில் 24 ஆம் திகதியும், ஜூன் மாதம் 23 ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் 20 ஆம் திக தியும், ஏப்ரல் மாதம் 7 ஆம் திக தியும் சம்பளம் வழங்கப்படும்.

இதேவேளை ஜனவரி, பெப்ர வரி, மார்ச், மே, ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் 10 ஆம் திகதியும், ஜூன் மாதத்தில் 9 ஆம் திகதியும், செப்ரெம்பர், டிசெம்பர் மாதம் 8 ஆம் திக தியும், ஜூலை மாதம் 7 ஆம் திகதி யும் சம்பள முற்பணம் வழங்கப் படும். ஏப்ரல் மாதத்தில் சம்பள முற்பணம் வழங்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# பேரவைக்கு வரும் மாணவர்களை இராணுவத்தினர் அச்சுறுத்துகின்றனர்

## சர்வதேச மாணவர் பேரவை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

பலாலி வீதியில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் முன்பாக பாதுகாப்பு கடமை யில் ஈடுபட்டிருக்கும் இராணு வத்தினர் தம்மை அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்டுவருகின் றனர் என- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை குற்றஞ்சாட்டி யுள்ளது. இது தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது-

கடந்த வாரம் குடாநாட் டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற தாக்குதல் சம்ப வங்களின் பின்னர் இராணுவத் தினர் பெருமளவில் வீதிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பலாலி வீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட் டிருக்கும் இராணுவத்தினர்- சர்வதேச மாணவர் பேரவை யின் முன்பாக நின்று மாணவர் பேரவையில் நிற்கும் மாணவர் களையும், கணினிப் பயிற்சிக்கு செல்லும் மாணவர்களையும் துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தி வருகின்றனர். இராணுவத்தின ரின் விசமத்தனமான நடவடிக் கையால் தமது நாளாந்த தேவை களுக்காக வரும் மாணவர்கள் அச்சத்துடனேயே வந்து செல்ல வேண்டியுள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் பிற்பகல் வீதியால் சென்றுகொண்டிருந்த திறந்த பல்கலைக்கழக மாணவனை வழிமறித்த இராணுவத்தினர் மாணவனை கடுமையாகத் தாக் கியுள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் அடாவடித் தனங்கள் தொடர்பாக, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது எனவும் தெரிவிக் கப்படுகிறது.

## கணினி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் —

உலக சுகாதார அமையத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஊழி யர்களுக்கு கணினிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் கடந்த திங்கட்கிழமை முதல் எஸ்.ரி.பி.கணினி நிறுவனத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வரு கிறது. இந்த வகுப்பு தொடர்ந்து இரண்டு வாரங்கள் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 'தெரிதல்' இதழ் வெளிவந்துள்ளது

கொக்குவில் —

அ.யேசுராசா அவர்களை ஆசி ரியராகக் கொண்டு வெளிவரும் 'தெரிதல்' இதழின் 12 ஆவது இதழ்வெளியீடு வெளிவந்துள் ளது.

குந்தவை, ச.இராகவன், பி. லீலா, செ.திருநாவுக்கரசு, சி. ரமேஷ், அ.யேசுராசா ஆகியோ ரின் ஆக்கங்கள் அடங்கிய இந்த இதழ் புதிதாக அலங்கரித்து வெளியிடப்பட்டுள்ளது. (206)

## 'பொலிவு' இதழ் வெளிவந்துள்ளது

சுதுமலை —

அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்தின் பெண்கள் அபிவிருத் தித்திட்டத்தால் வெளியிடப் பட்டுவரும் மாதாந்த சஞ்சிகை யான 'பொலிவு' இதழ் வெளி வந்துள்ளது.

பெண்கள் தொடர்பான முழுமையான தகவல்களை உள் ளடக்கிய அபிவிருத்திக்கான மாத இதழின் ஆறாவது இதழாக வெளிவந்துள்ளது.

பெண்கள் வாழ்வில் விடி வெள்ளி என்ற -சூரியாவின் கவி தையும், புதிய மனுசி என்ற- ஆதி லட்சுமி சிவகுமாரின் தொடர் நவீனமும், வழிதவறும் பெண் களும் யாழ்ப்பாணக் கலாசார மும் என்ற - ஆரணியின் கட்டு ரையும் அடங்கியுள்ளது. (91)

# தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன

சுதுமலை —

தென்மராட்சி கல்வி வலயத் தில் இரண்டு பாலர் பாடசாலை மற்றும் ஒன்பது பாடசாலை களும் சிறுவர் பாதுகாப்பு நிதி யத்தால் புரமைக்கப்படவுள்ளன.

இவற்றின் அவசிய தேவை கள், அபிவிருத்திப் பணிகளைக் கருத்தில் கொண்டே இந்தப் புனரமைப்புப் பணிகள் இடம் பெறவுள்ளதாக நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாவற்குழி கிராமத்தில் கலை வாணி, சிவமணி ஆகிய இரண்டு பாலர் பாடசாலைகளும், மந்து வில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரணிய வித்தியாலயம், அல்லாரை அர சினர் தமிழ்க் கலவன் பாட சாலை, நாவற்குழி மகாவித்தி யாலயம், மீசாலை கமலாம் பிகை வித்தியாலயம், கொடி காமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கைதடி முத்துக்கு மாரசுவாமி மகாவித்தியாலயம், கரம்பை அரசினர் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, குடமியன் அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை ஆகிய பாடசாலைகளே புனரமைக்கப்படவுள்ளன.

இவற்றின் புனரமைப்புக் கென தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளதாகவும், மிக விரைவில் இந்தப் பாடசாலைகள் புதுப் பொலிவு பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(91)

# நிகொட் உதவித் திட்டத்தின் கீழ் 15 பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம் —

நிகொட் திட்டத்தின் யாழ். குடாநாட்டில் தெரிவு செய்யப் பட்ட 15 பாடசாலைகளுக்கான தளபாடங்கள் யாழ்.செயலகத் தில் இயங்கும் நிகொட் அலு வலகத்தில் இந்த வாரம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் தாவடி இந்து தமிழ் கலவன் பாட சாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியால யம், கோப்பாய் நாவலர் வித் தியாலயம், நீர்வேலி கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, ஆவரங்கால் மகாஜனக் கல்லூரி, மண்டைதீவு றோமன் கத் தோலிக்க வித்தியாலயம், ஊர் காவற்துறை சென்மேரிஸ் கல்லூரி, மண்டைதீவு மகாவித்தி யாலயம், மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், உசன் வீரசிங்கம் வித்தியாலயம், மிருசுவில் அர சினர் தமிழ்க் கலவன் பாட சாலை, மட்டுவில்சரஸ்வதி வித் தியாலயம்,நாவற்குழி மகாவித் தியாலயம் ஆகிய பாடசாலை களுக்கே தளபாடங்கள் வழங் கப்பட்டன.

குறிப்பிட்ட பாடசாலை களின் அதிபர்கள் உடனடியாகத் தொடர்பு கொண்டு, பாடசாலை களுக்கான தளபாடங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நிகொட் பிரதித் திட்டப்பணிப்பாளர் க.நவரத்தினராசா தெரிவித்துள் ளார்.

# போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை அடுத்த மாதமளவில் திறக்கப்படவுள்ளது

சுதுமலை —

வலிகாமம் கிழக்குப் பிர தேசத்தில் ஜி.ரி. இசற் நிறுவனத் தின் நிதியுதவியுடன் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று 36 லட்சம் ரூபா செல வில் அமைக்கப்பட்டு வருகிறது.

புத்தூர் மேற்கு புத்தூர்-சுன் னாகம் வீதியில் சிற்திட்டி எனு மிடத்திலேயே பனம் மற்றும் தென்னை ஆகியவற்றின் கள்ளைப் போத்தலில் அடைக்கும் தொழிற் சாலை அமைக்கப்பட்டு வரு கிறது.

இந்தப் பிரதேசத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருவதால், பலர் நேரடியாக தொழில் வாய்ப்பைப் பெறுவது டன், பிரதேச சீவல் தொழிலாளர் கள் பலரும் நன்மையடைவார் கள் என நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில மாதங்களில் கள் அதிகள வில் உற்பத்தி செய்யப்படுவதால் விற்பனை செய்ய முடியாத பல ஆயிரம் போத்தல்கள் வீண் விரய மாவதாகவும் இவ்வாறான தொழிற் சாலைகளை அமைப்பதன் ஊடாக கள் தட்டுப்பாட்டையும், வீண் விரயமாகும் கள்ளின் அளவை யும் குறைக்க முடியுமென அவர் தெரிவித்தார்.

கட்டிடப் பணிகள் மிகவிரை வாக இடம் பெற்றுவருவதா கவும். அடுத்த மாதமளவில் நிறு வனத்தின் செயற்பாடுகள் ஆரம் பிக்கப்படவுள்ளதாகவும் கூறப் படுகிறது. (91)

# சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மனையியல் டிப்ளோமாப் பயிற்சி நெறி

சுதுமலை —

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்திக் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் இலவச மனையியல் டிப்பிளோமாப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் 50 யுவதிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், இம்முறை பண்டத்தரிப்பில் இப்பயிற்சி நெறி நடாத்தப்படவுள்ளதாகவும் பிர தேச செயலர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

பயிற்சி முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு சித்தியடையும் மாண விகளுக்கு வடக்கு -கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக் களத்தின் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் அனைவருக்கும் நளொன்றுக்கு 50/= ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (91)



ஹற்றன் நஷனல் வங்கியின் காப்புறுதி நிறுவனத்தின் புதிய பிராந்திய அபிவிருத்தி நிலையம் நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வங்கியை - வலயம் இரண்டின் உதவி பொதுமுகாமையாளர் கிரிசாந்தி தம்பையா நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும், வாடிக்கையாளர்கள் வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம்.

படங்கள் - யூட், தீபன்

தொழில்மலர்

# தனியார் மயமாக்கலில் உள்ள சவால்களும் இலங்கை அரசாங்கமும்

இலங்கை நாடானது சுதந்திரத்துக்குப் பின்பு இரண்டு பலம் பொருந்திய அரசியல் கட்சிகளினாலேயே இதுவரை காலமும் ஆட்சி செய்யப்பட்டுவந்தது. ஆனால் கடந்த 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலின் மூலம், ஒரு கூட்டமைப்பு ஆட்சி நிறுவப்பட்டது. இக் கூட்டமைப்பு இலங்கை பொதுசன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி இரண்டும் இணைந்ததாகக் காணப்படுகின்றது.



ஆனால், இவ்வாட்சியாளர்கள் எப்போதும் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து கூறும் தீர்ப்புக்களை ஆழும் கட்சிக்கு வந்ததும் மறந்து விடுகின்றனர் அல்லது நடைமுறைப்படுத்த மறுக்கின்றனர். இதனாலேயே இவ்வினப் பிரச்சினையானது தொடர்ந்த வண்ணம் உள்ளது என்பது பொதுவான ஒரு பார்வையாகும்.

இதனைப் போலவே வெளிநாட்டுத்துறையினருடனான திறந்த சந்தை நடவடிக்கையிலும் அரசு மாறுபட்ட நிலைப்பாட்டைக்கொண்டிருந்தது. ஆனால், சற்று வித்தியாசமான கொள்கையாக ஆட்சிபீடம் ஏறியதும் அது நடைமுறைப்படுத்தவும் பட்டது. இதற்கு உதாரணமாக ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்திய திறந்த பொருளாதார கொள்கையை பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் முடிய பொருளாதாரக் கொள்கையாக அமுல் படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த ஆட்சியாளரான ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் திறந்த பொருளாதாரக் கொள்கையினையே அமல்படுத்தியது. அதனைத் தொடர்ந்து திறந்த பொருளாதாரக் கொள்கைகளே இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்படி ஒரு நிலையிலேயே இன்றைய பொருளாதாரமானது காணப்படுகிறது. அதாவது அரசதுறை நிறுவனங்களை தனியார் துறையினிடம்கைமாற்றுவது காணப்படுகின்றது. ஆனால் அதற்கு எதிர்ப்புக்கள் - எதிர்க் கட்சிகள், தொழிற் சங்கங்கள் என பல தரப்பாலும் காலத்துக்கு காலம் முன்வைக்கப் பட்டே வருகிறது. ஆனால், தனியார் மயப்படுத்தல் சேவை எப்படியோ நிறைவேற்றவேபடுகின்றது. இதற்கு உதாரணமாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி சுதந்திரம் அடைந்த இலங்கையில் அனைத்துத் துறைகளும் அரச துறையாகவே காணப்பட்டது. ஆனால், இன்று எத்தனை துறைகள் தனியார் மயப்படுத்தப் பட்டுள்ளன என பார்ப்போமாயின், தனியார் மயமாக்கல் நடைமுறைப்படத்தப்பட்டே வந்துள்ளமை புலனாகும்.

அரசானது- தனியார் மயமாக்கம் செய்வதற்கு உதவி வழங்கும் நாடுகளின் தூண்டுதல், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என பல துறைசார் அழுத்தமும் காரணமாக அமைகிறது. ஏனெனில், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களினை அரசானது விற்பனை செய்து, அதாவது, தனியார் மயமாக்கி தனது நட்டத்தை குறைத்துக்கொள்ள சந்தர்ப்பமாக இது அமையும். இதனால் அரசு கடன் படவேண்டிய தேவை அற்றதாகக் காணப்படும் என இது போன்ற அமைப்புக்கள் குறிப்பிடுகின்றன.

வினைத்திறன் அற்றதாகக் காணப்படும் தொழில்துறையைத் தனியார் மயமாக்குவதன் ஊடாக தொழிற் துறையில் வினைத்திறனை அதிகரித்துக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும் என்ற கருத்தும் தற்போது வலுப்பெற்றே வருகின்றது. ஆனால் அரசு அனைத்து துறைகளையும் அப்படி தனியார்மயமாக்க முடியாது.

ஏனெனில், சேவை நோக்கமுள்ள அத்தியாவசிய சேவைகளை அரசே கண்காணிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையின் ஜனாதிபதியே விமான சேவை **(Srilanka Airlines)** தனியார் மயமாக்கப் பட்டதனால் உச்ச பயன்பாடு அச் சேவையின் ஊடாக பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என தெரியப் படுத்தி இருந்தனர். அப்படி என்றால், நாட்டின் தலைவியே தனியார் மயமாக்கல் உச்சப் பயன்பாட்டை பெற்றுத்தர வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதை உறுதிபடக் கூறியுள்ளார் எனலாம். இது தனியார் மயமாக்கலுக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

தனியார் மயமாக்கலுக்கு எதிர்க்கட்சி ஊழியர் தொழிற்சங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பது வழமையானதாகக் காணப்படுகின்றது எனலாம்.

இதற்கு தொழிற் சங்க எதிர்ப்பானது- ஊழியரின் தொழிலில் காணப்படும் ஆபத்து மற்றும் ஊழியரின் மீதான கட்டுப்பாடு மற்றும் ஊழிய சுரண்டல் போன்ற பல்வேறு காரணிகளினால் எதிர்பலையை தோற்றுவிக்கின்றன. ஆனால், இவை உறுதி செய்யப்படுமாயின், ஊழியரின் எதிர்ப்புக் குறைக்கப்படுமா? அல்லது முற்றாக நிறுத்தப்படுமா? என்பது கூறமுடியாத ஒன்றுதான் எனலாம்.

அண்மையில் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் மின்சாரசபை மற்றும் எரிபொருள் தொடர்பான ஒரு சட்ட மூலத்தை முன்வைத்தனர். அது தனியார் மயமாக்கலுக்கான செயற்திட்டம் எனக்கூறி, தொழிற்சங்கங்கள் அனைத்தும் வேலை நிறுத்தத்தில் குதிப்பதாக எச்சரித்தன. உடனடியாகவே அதனுடைய விளைவு எரிபொருளுக்கான தட்டுப்பாடாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை அரசு அவசர நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், குறிப்பிட்ட பிரேரணையையும் நிறுத்திவைத்தது. இதன் மூலம் இக்குறிப்பிட்ட



துறைகளில் காணப்பட்ட அசாதாரண நிலைமாற்றப்பட்டு, நிலமை வழமையடைந்தது.

இதன்போது அரசானது இரண்டு பாரிய சவால்களை எதிர்நோக்கியது எனக் கூறப்படுகின்றது.

அதில் முதலாவதாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையைக் குறிப்பிடலாம்.

அதாவது- பெற்றோலியப் பொருட்களின் தட்டுப்பாடு பரவலாக ஏற்பட்டது. இரண்டாவதாக அரசின் ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட முரண்பாடுகளைக் குறிப்பிடலாம்.

அரசின்உள்ளகமுரண்பாட்டுக்கு பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியினால் காட்டப்பட்ட எதிர்ப்பே காரணம் எனக் கூறப்படுகின்றது. ஏனெனில், இக்கட்சிக்காரர்கள் வெளிப்படையில் உலக வங்கி, உலகநாடுகளின் செயற்பாடுகளை எதிர்ப்பவர்கள்.

இதனால் தனியார் மயமாக் கலுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பவர்களாகவே காணப்பட்டனர் எனலாம்.

அதன்படி இவர்கள் இப்பிரேரணையை எதிர்ப்பவர்களாகவே காணப்பட்டனர் எனப் படுகின்றதுடன், இவர்களது கொள்கைக்கு எடுத்துக்காட்டாக 2005 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத்திட்டத்தைக் குறிப்பிடலாம்.

ஏனெனில், அதில் உள் நாட்டு வளப்பயன்பாடு, உள்நாட்டு உற்பத்தி என்பன பற்றிய வளர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதுடன், வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவது பற்றிப் பெரிதாக விபரிக்கப்படவில்லை. எனவே இது உள்நாட்டை மையமாகக் கொண்ட ஒரு வரவு- செலவுத்திட்டமாக காணப்பட்டதுடன், நிதிப்பிரச்சினையை எப்படி இலங்கை சமாளிக்கும் என்பது தொடர்பான சந்தேகத்தையும் ஏற்படுத்தி இருந்தது. ஆனால், சுனாமி அலையுடன் வந்த உதவிப் பணிகள் இதற்கு விடை காண்பதை தடைசெய்துள்ளது அல்லது மறைத்துள்ளது எனலாம்.

எது எப்படியோ இன்று தனியார் மயமாக்கம் செய்யப்படாது நாட்டைக் கட்டியெழுப்புவது கடினம் எனும் கருத்தும் வலுப்பெறுகின்றது. எனவே நாட்டில் ஜனாதிபதியும், அவரது கட்சியும் மற்றும் அவர்களினுடைய பங்காளிக்கட்சிகளும் ஒருமித்த முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல், மக்களிடையே செல்வாக்கு, சுனாமி மீள் புனருத்தாரணம், புலிகளுடன் சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது எனப் பல சிக்கல்களை எதிர்நோக்கும் ஆட்சியாளர்கள் தனியார் மயமாக்களிலும் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பார்களா? எடுக்க முடியுமா? என்பது சந்தேகமே.

ஏனெனில், ஜனாதிபதி தனியார் மயமாக்கலில் உறுதியாக உள்ளார்.

ஆனால் அவர்களது பங்காளிக்கட்சியினர் எதிர்த்திசையை நோக்கியே நகர்பவர்களாகவே உள்ளனர்.

ஏனெனில், மக்களின் கட்சி எனத் தம்மை இனங்காட்டியுள்ள மக்கள் விடுதலை முன்னணி, இந்தப் பிரச்சினைக்கு எதிர்ப்பே தெரிவிக்க வேண்டும் அல்லது மக்களிடம் காணப்படும் செல்வாக்கும், சொல்வாக்கும் பொய்த்து விடும்.

எனவே தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக் கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஏற்பட்டுள்ளது.

எடுக்கப்படும் முடிவானது உலகவங்கி, மற்றும் உலக அமைப்புக்களுக்கு எதிராகக் காணப்படுமாயின், அதனால் ஏற்படும் அழுத்தங்களை எப்படிச் சமாளிப்பது என ஒரு உறுதியான முடிவு எடுக்க வேண்டி ஏற்படுவதுடன், அந்த முடிவு ஆட்சியை தொடர வாய்ப்பாக அமையுமா? என்பதையும் தீர்மானிப்பதாக அமைந்தாலும் சந்தேகமே இல்லை.

- வனிகன்

## இது பற்றிச் சிந்திப்போம்...!

தெரிந்த சில தேடல்கள்மூலம் - எமக்கான
கௌரவத்தினைத் தேடுவதைவிட
தெரியாத தேடல்களைத் தேடுவதன் மூலம்
எம்மை நாம் கௌரவப்படுத்துவது
என்றும் மேன்மையானது.

# அரச சார்பற்ற பொது நிறுவனங்களின் - (NGO'S) சுயதொழில் விருத்திக் கடன் திட்டங்கள்

கமநல சேவை நிலையங்களுடனான கலந்துரையாடல் மூலம் பெற்றதரவுகள் சுய தொழிலினை விருத்தி செய்யும் நோக்குடன் அரசசார்பற்ற நிறுவனங்களால் பல்வேறு



கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகின்றது. அவற்றில் ஒரு சில நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் பற்றி நோக்குவோம்.

**CARE**

இந்த நிறுவனத்தால் பல்வேறு திட்டங்களுக்காக கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

☆ உணவு உற்பத்தித் திட்டம்

(உ+ம் ) பயிர்வளர்ப்பு, மீன்பிடிக் கைத்தொழில்.

☆ நுண்மதி (Micro finance) திட்டம்.

(உ+ம்) IGA (income generation activitiees)

வியாபாரக் கடன், நெற்செய்கை, தானியச் செய்கை, மீன்பிடி போன்ற செயற்பாடுகளுக்கு 100% RLE (Revolving Loan Fund) அடிப்படையில் வழங்கப்படுகின்றது. கால்நடை வளர்ப்புத் திட்டத்துக்குப் பொதுவாக மானிய அடிப்படையில் நிதி வழங்கப்படுகின்றது.

☆ நிபந்தனைகள் -பொது

☆ ரூ 1500 இற்கு குறைவான மாதவருமானம்.

☆ 5இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

☆ 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

☆ உணவு உற்பத்தியானது -

1. சொந்த நிலத்தை உடையவர்கள்.

2. பயிர் உற்பத்தியில் போதிய அனுபவம்

3. போரால் பாதிக்கப்பட்டிருத்தல்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் தெரிவு செய்யப்படும் கடன் பெறத் தகுதியானோர்.

கிராம சேவையாளர்/ கமநல சேவைத்தலைவர்/ மிருகவைத்தியர் / மீனவசங்கம் போன்வற் றின் உறுதிப்படுத்தலும் சமர்ப்பிக்க வேண்டும்.

☆ மீள் அளிக்கும்காலம்

கடன் வகையைப் பொறுத்து வேறுபடும். ஏற்கதகுந்த காரணங்களால் கடன் மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மீண்டும் ஒருமுறை கடன் வழங்கி இரண்டினையும் சேர்த்து மீள் அளிக்கும்படி அறிவுறுத்தப்படும்.

☆ கடன் விபரம்

கடன் கூட்டாகவும், தனிப்படவும் கடனின் தன்மையைப் பொறுத்து வழங்கப்படுகிறது.

(உ+ம்) மீன்பிடி - 2 நபருக்கு 200/=

விவசாயம் - 1நபருக்கு 9000/= (நெல்)

விவசாயக் கடனானது வேறு தானிய வகைகளுக்கும் வழங்கப்படும்.

HUDEC (மனிதமுன்னேற்ற நடு நிலையம்)

வறிய மக்களுக்கு ஒரே வரப்பிரசாதமாக சுய தொழில் வாய்ப்புக் கடன் திட்டமானது- இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்த மாத வருமானம் உடைய குடும்பங்கள் / கணவனை இழந்த குடும்பங்கள் போன்றவற்றில் இருந்து தெரிவு செய்யப்படும் கடன் பெறத் தகுதியானவர். பங்குத்தந்தை/ கிராம சேவையாளர் / விவசாய சம்மேளனத்தால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயம், விவசாயம் சார்ந்த கைத்தொழில், கால்நடை வளர்ப்பு போன்றன அபிவிருத்தி செய்யப்படுகின்றன. சுழற்சி முறையாக வழங்கப்படும். இந்தக் கடன் திட்டத்தில் இந்தப் பிரதேசத்தில் முதலில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு, அதிகூடிய தொகையாக 10,000/= திற்கு உட்பட்ட கடன் வழங்கப்படும். ஒவ்வொருவரும் இரு பிணையாளிகளையும் குறிப்பிடவேண்டும். கடன் தொகையானது- குறித்த விவசாய சம்மேளங்களின் தலைவர், பொருளாளர் ஊடாக குறித்த நபருக்கு வழங்கப்படும்.

☆ மீள் அளித்தல்.

கடன்தொகை 10,000/= எனில் ஒவ்வொரு மாதமும் ரூ 1000/= வீதம் 10 மாதத்தில் முழுவதையும் மீளளிக்க வேண்டும். (நிறுவனத்துக்கு)

☆ வட்டி வீதம்

10-15 % வரை வேறுபடலாம். வட்டிப் பணம் குறித்த விவசாய சம்மேளனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும். எனினும், இது தொடர்பான முழுவிபரங்களும் HUDEC நிறுவனத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

கள உத்தியோகத்தரினால் வாரம்தோறும் சுயதொழில் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு, கள அறிக்கை நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

☆ மீளச் செலுத்தத் தவறுதல்

1. உண்மையான பாதிப்பு அறியப்படின், மீள் அளிக்க வேண்டிய எல்லை மேலும் ஒரு மாதத்தால் நீடிக்கப்படும்.

2. மீளச் செலுத்தாமல் நிலுவையாக இருக்கும் பணத்தை பிணையாளிகள் இருவரும் செலுத்த வேண்டியிருக்கும்.



இதைவிடவும் நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி, போன்றவை விவசாய சம்மேளனங்களுக்கு வழங்கப்படும்.

☆ பணியாற்றும் பிரதேசங்கள்

தெல்லிப்பளை, மட்டுவில், இளவாலை, தீவகம், ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலை இல்லாத பிரதேசங்கள்.

**UNDP - (United Nation Development Programme)**

இந்த நிறுவனம் தற்போது umbrella Project எனப்படும் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. பாரிய இந்தத் திட்டத்தில் விவசாயம் சார் கடன் திட்டங்களும் உள்ளன.

MPCS செய்யப்பட்ட 7 பல நோக்கு (MPCS) கூட்டுறவுச் சங்கத்துக்கு விதைக்கான கடன் கொடுப்பனவு MPCS இதனைச் சுழற்சி முறைக் கடன் திட்டமாக (RLFS) நிர்வகிக்கின்றது.

பெறப்பட்டகடனை எந்தவிதம் உச்சமாகப் பயன்படுத்தல் என்பது பற்றிய பயிற்சி நெறிகளை வழங்கல்.

☆ மீன்பிடிக் கடன் திட்டம்

தெரிவு செய்யப்பட்ட 20 மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகச்சுழற்சி முறைக் கடன் வழங்கல்.

- ஆர்.கே.மேனன் -

# சற்று சிரத்தை இருப்பின் சிரட்டையிலும் பணம் ஈட்டலாம்



சிரட்டைகள் எதற்குப் பயன்படும்? வீட்டில் விறகு அடுப்பு இருந்தால் அதில் எரிக்க அல்லது கலைப் பொருட்கள் செய்யப்பயன்படும். இரண்டும் இல்லாவிட்டால், குப்பைத் தொட்டியில் வீசி எறியப்படும் இந்த சிரட்டையையும் பணமாக்கலாம் என்பதுதான் புது விடயம். தேங்காய்ச் சிரட்டைக்கு பெருகியுள்ள உலகளாவிய ஏற்றுமதி வாய்ப்புத்தான் இதற்குக்காரணம்.

பல நாடுகளில் பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்படும் மூலப்பொருளாக சிரட்டைகள் மாறிவிட்ட[illegible], பல நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் பட்டியலில் தேங்காய்ச் சிரட்டைகளும் இடம் பிடித்துவிட்டது.

இதனால் இன்று இந்தியாவின் தென் மாவட்டங்களில் வீடுதேடி வந்து சிரட்டைகளை வாங்கத் தொடங்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தேங்காய்ச் சிரட்டையின் வேதியியல் தன்மையை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் அதை கரித்தூள் பவுடராக மாற்றி, விஷத் தன்மையை முறிப்பதற்கு பயன்படும் மருந்துப்பொருளாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தனர்.

இது தவிர, மருத்துவ பொருளான அன்டாசிட் (Antacid) தயாரிக்கவும் பெருமளவில் பயன்படுகின்றது. இதனாலேயே சிரட்டைகளின் மதிப்பு கூடிவிட்டது. சிரட்டையை உடைத்துவறுத்துப் பொடிசெய்து விற்றால், கிலோ ஒன்றுக்கு ரூபா 16 வரை பெறலாம். சிரட்டைப் பவுடர் (35%) மரத்தூள் (52.9%) டி-டிரான்ஸ் அ[illegible] லெத்ரின் (0.1%) மரிக்கேல் மாவு அல்லது மைதா மாவு (12%) ஆகியவற்றை கெட்டியாக அரைத்து அதனுடன் சிறிதளவு சிட்ரனில்லா அல்லது லெமன் கிராஸ் கலக்க வேண்டும்.

இதை அச்சுக்களில் கூம்பு அல்லது குச்சி வடிவமாகவோ தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்தால் அதுவே கொசுவர்த்திச்சுருளாக இருக்கின்றது.

இடவசதி இருந்தால் இத்தகைய கொசுவர்த்தி உற்பத்தி ரூபா 30 ஆயிரம் என்ற எளிய முதலீட்டில் தொடங்கலாம்.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு நல்ல விற்பனை வாய்ப்பு உள்ளது.

மருந்து திரவங்கள், கொசுவர்த்திச்சுருள், தயாரிக்கப் பயன்படும் பொருளாக மட்டுமன்றி, வர்ணம், வெடி பொருள் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு வகைகளில் சிரட்டையின் பயன்பாடு அதிகரித்து வருகின்றது.

எனவே சிரட்டைக்கும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும்.

ஆகவே, நாம் கழிவுப் பொருள் என எரிப்பதற்கு பயன்படும் சிரட்டை மூலம் பவுடரும் (சிரட்டை) விற்பனை செய்யலாம்.

நுளம்புத் திரியும் உற்பத்தி செய்யலாம்.

சற்று சிரத்தை இருந்தால் சிரட்டையாலும் பணம் ஈட்டலாம்.

பசுந்தோகை

## கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிறுவர்களுக்கு உடுபுடவைகள் வழங்கல்

கிளிநொச்சி—

கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள சிறுவர்களுக்கு உடுபுடவைகள் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கரைச்சிப்பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பட்டு உத்தியோகத்தரினால் சிறுவர்களுக்கான உடுபுடவைகள் வழங்கப்பட்டுள்ளன.

கனகாம்பிகைக்குளம், பாரதிபுரம், மலையாளபுரம், இரத்தினபுரம், சிவநகர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிற்குட்பட்ட சிறுவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே முதல் கட்டமாக இவை வழங்கப்படுவதுடன், மிக விரைவில் ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறுவர்களுக்கு பல்வேறு உதவிப் பெருட்கள் வழங்கப்படவுள்ளதாகவும், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (91)

## கடத்தப்பட்ட புளொட் உறுப்பினருக்கும் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை

### வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம்

வவுனியா—

வவுனியாவில் கடத்தப்பட்ட புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தரும், மத்திய குழு உறுப்பினருமான பாரூக் (சின்னத்தம்பி கணேசலிங்கம்)கடத்தப்பட்ட சம்பவத்துக்கும், தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினருக்கும் இடையில் இரண்டாவது முறையாக வவுனியா புளியங்குளம் பகுதியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் கடத்தலுக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையெனத் தெளிவாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளிடம் தாம் தெரிவிப்பதாகவும், இந்தக் கடத்தல் சம்பவமானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும், தாம் இதில் சம்பந்தப்படவில்லையெனவும், காணாமற்போன நபரைக் கண்டுபிடிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு இராணுவத்தினரையும், பொலிஸாரையும் சாரும் எனவும் தெரிவித்தார்.

தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் கடத்தப்பட்ட நபர் இருப்பதாகத் தெரிந்தால், தாம் அவரைப் பிடித்துத் தருவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுப்பதாகவும், ஆனால் அவர் தமது பகுதியில் இல்லையெனவும், தம்மால் அவர் கடத்தப்படவில்லை என்பதையும், தம்மீது வீண் பழி சுமத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 324 குடும்பங்களுக்கு யுனிசெப் நிறுவனத்தால் உதவிப்பொருட்கள் வழங்கல்

கிளிநொச்சி—

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோணாவில், ஆனைவிழுந்தான், அக்கராயன், கண்ணகிபுரம் ஆகிய பிரதேச மக்களுக்குப் பல்வேறு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் பெய்த கடும் மழையால் வீடுகளை இழந்த மற்றும் இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கே இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

நுளம்புவலை, பாய், சவற்காரம், தண்ணீர்க் கான், பெற்சீற், கூரை விரிப்புக்கள், சிறுவர் பெரியோரிற்கான உடுபுடவைகள் என்பவே வழங்கப்பட்ட பொருட்களாகும்.

அக்கராயன் பிரதேசத்தில் 136 குடும்பங்களுக்கும், வன்னேரி பிரதேசத்தில் 52 குடும்பங்களுக்கு, ஆனைவிழுந்தான் பிரதேசத்தில் 90 குடும்பங்களுக்கும், கண்ணகிபுர பிரதேசத்தில் 46 குடும்பங்களுக்கும் என 324 குடும்பங்களுக்கு இந்த உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பிரதேச செயலகத்தால் வேறு பல உதவிப் பொருட்களும் வழங்கப்பட்டவுள்ளதாகவும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (91)

## கிளிநொச்சியில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 1091 வீடுகள் அமைப்பு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒவ்வொன்றும் 6 லட்சத்து 86 ஆயிரம் ரூபா பெறுமதியான 1091 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அறிவியல் நகர் கிராமத்தில் கனேடிய செஞ்சிலுவை சங்கத்தால் 164 வீடுகளும், கண்டாவளை பிர தேச செயலர் பிரிவில் கண்ணகை நகர் கிராமத்தில் சுவீஸ் ஆஸ்தரி செஞ்சிலுவைச் சங்கத்தினால் 250 வீடுகளும், பளை பிரதேச செயலர் பிரிவில் கோவில்வயல் கிராமத்தில் சுவீஸ் ஆஸ்திரிய செஞ்சிலு வைச் சங்கத்தினால் 320 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நாச்சிக்குடா கிராமத்தில் 36 வீடுகளும், முழங்காவில் கிராமத்தில் 109 வீடுகளுயும், பள்ளிக்குடா கிராமத்தில் 125 வீடுகளும், கௌதாரி முனை கிராமத்தில் 144 வீடுகளும் - மொத்தம் 417 வீடுகளைக் கனேடிய செஞ்சிலுவைச் சங்கமும் அமைத்துக் கொடுக் கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)





கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முல்லைமணி வே.சுப்பிரமணியத்திற்கு கௌரவிப்பு விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் நடைபெற்ற - பாராட்டு விழாவில் முன்னாள் வித்தியானந்த கல்லூரி அதிபர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், இந்த நிகழ்வில் கலந்து கொண்டோர்களையும் படங்களில் காணலாம்.

(படம்: கனகரவி)

## ஊரக மேம்பாட்டு குழுவின் செயற்பாடு குறித்து கலந்துரையாடல்

இராமநாதபுரம்—

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேச ஊரக மேம்பாட்டுக் குழுக்களின் செயற்பாடு தொடர்பாக ஊரக மேம்பாட்டு நிறுவன உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இராமநாதபுரம் கரைச்சிப் பிரதேச உபபணிமனையில் வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் சுடர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மதி, அரச சார்பற்ற இணையத் தலைவர் கணேசபிள்ளை, கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள், நிர்வாக சபை பொறுப்பாளர் நாகேஸ், தமிழர் புனர்வாழ்வு கழக மாவட்ட இணைப்பாளர் ராஜன், மாயவனூர் கிராம சேவையாளர் ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)

## முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

வடமராட்சி—

லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள் -நாளை மாலை 6 மணிக்கு வடமராட்சி கிழக்கு பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புரைகள், இசைநிகழ்ச்சிகள், பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன. (21)

## சுழற்சி முறையில் கடன்

இராமநாதபுரம் —

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் 2005 ஆம் ஆண்டு விவசாயத்தை ஊக்குவிக்குமுகமாக 30 விவசாயிகளுக்கு தலா 20 ஆயிரம் வீதம் 6 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

இதில் சுய தொழில் கடனாக 50 பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (இ)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசம்பர் 15

1654: டஸ்கானி என்னும் இடத்தில் லூகி ஆண்டினோரி என்பவரது பொறுப்பில் முதன் முதலாக வானிலை அவதான நிலையம் திறந்து வைக்கப்பட்டது. பர்மா, போலோக்னோ, ப்ளாரென்ஸ், மிலான் ஆகிய இடங்களில் அவதானிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, தினமும் வெப்பநிலை குறித்து வைக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

1791: அனைத்து அமெரிக்க மாநிலங்களினாலும் உரிமைகள் பற்றிய பத்து திருத்த விதிகளும் அங்கீகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அமெரிக்க அரசியல் சட்டத்தின் ஒரு அங்கமாக அவை இணைக்கப்பட்டது.

1857: விஞ்ஞான தொழில்நுட்பத்துறையில் "ஏரோ டைனமிக்ஸ்" என்னும் புதிய துறை உருவாகக் காரணமாக இருந்த பிரிட்டிஸ் இயற்றாளர் சேர்.ஜோர்ஜ் கேலி இங்கிலாந்தில் பிராம்ப்டன் என்னுமிடத்தில் காலமானார். நவீன விமானத்தைக் கண்டுபிடித்தவர் இவர்தான் என்று உலகம் ஒத்துக்கொண்டுள்ளது.

1902: அத்திலாந்திக் மாகடலைக் கடந்து முதன் முறையாக வானொலி செய்திக் குறிப்பொன்று அனுப்பப்பட்டது. "தடைம்ஸ்" என்னும் பத்திரிகையின் நிருபர் கனடாவில் கிளேஸ்பே என்னுமிடத்தில் அனுப்பிய செய்திக்குறிப்பே கம்பியில்லா தந்தி மூலம் கடத்தப்பட்டு பத்திரிகை அலுவலகத்தைச் சென்றடைந்தது.

1928: லண்டனில் பெயர்ட் அன்ட் கம்பனி தொலைக்காட்சியில் முதன்முதலாக ஒரு நாடகம் ஒளிபரப்பப்பட்டது.

1943: ஜப்பானிடமிருந்து அவுஸ்திரேலியாவின் நியூபிரிட்டன் தீவை மீட்க அமெரிக்கப்படை பெரும் தாக்குதலைத் தொடங்கியது.

1952: இந்தியாவில் தனி ஆந்திர மாநிலம் வேண்டுமென்று கோரி அக்டோபர் 20 ஆம்திகதி முதல் சென்னை இராயப்பேட்டை நெடுஞ்சாலையில் 57 நாட்களாக உண்ணாவிரதமிருந்த பொட்டி ஸ்ரீ இராமுலு மரணமடைந்தார்.

1961: அறுபது லட்சம் யூதர்களின் கொலைக்குக் காரணமாக இருந்த ஜேர்மனியின் முன்னாள் இரகசிய பொலிஸ் அதிகாரியான அடால்ஃப் ஹெச்மன் ஜெருசேலம் நீதிமன்றத்தால் தூக்கிலிடப்பட்டார்.

1966: கேலிச்சித்திரப்படம் மூலம் உலகப் புகழ்பெற்ற அமெரிக்கத் திரைப்படத் தயாரிப்பாளர் வால்ட் டிஸ்னி காலமானார்.

1970: ஓகஸ்ட் மாதம் 17ஆம்திகதி ரஷ்யாவால் ஏவப்பட்ட வெனீரா -7 என்ற விண்கலம் வீனசின் பரப்பில் வெற்றிகரமாக இயங்கியது. இறங்கி, 23 நிமிடங்களுக்கு தகவல் குறிப்புக்களை அனுப்பியது.

1981: போலந்தில் ஜெனரல் ஜாரு ஸெல்ஸ்க்கி தலைமையில் இராணுவ ஆட்சி கொண்டுவரப்பட்டது.

1984: ரஷ்யா ஹேலி வால் நட்சத்திரத்தை ஆராய்வதற்காக வேகா-1 என்னும் விண்கலம் செலுத்தியது.

1986: கலிபோர்னியாவின் எட்வர்ட் விமானத்தளத்திலிருந்து "வயோஜர்" எனப்படும் ஆய்வு விண்கலம் புறப்பட்டு, எரிபொருளுக்காக எங்கும் நிற்காமல் புவியை ஒரு முறை சுற்றி வந்து சாதனை படைத்தது.

✷ : ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவரை பிரிட்டன் நாடு கடத்தியது.

1988: அமெரிக்கா பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீது விரித்திருந்த தடையை நீக்கியது.

1993: "வர்த்தகம் சுங்கவரி பொது உடன்படிக்கைக்கு" 117 நாடுகள் அங்கீகாரம் அளித்தன.

2001: அமெரிக்காவால், பின்லேடன் ஒளிந்திருப்பதாகக் கருதப்பட்ட போரா-போரா மலைப்பகுதிகள் மீது 15000 இறாத்தல் நிறையுடைய குண்டுகள் போடப்பட்டன.

தொகுப்பு : - சந்துரு

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

சுதந்திர எழுச்சியின் உந்துதலால தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.
- தேசியத் தலைவர்

## நமது நோக்கு

## தமிழ்மக்களை அச்சுறுத்திவரும் இராணுவ சுற்றிவளைப்பு, தேடுதல்கள்

யாழ்.குடாநாட்டில் சமாதான சூழல் தனது இறுதி மூச்சை விடுவதற்கான சமிக்ஞைகள் தெளிவாகத் தெரியத்தொடாங்கியுள்ளது.

கடந்த நான்காண்டு கால சமாதானமற்ற சமா தான சூழ்நிலை மெல்ல மெல்ல மங்கி மறைய ஆரம்பித்துள்ளதுடன் மீண்டும் நான்காண்டுகளுக்கு முந்தைய அச்சமூட்டும், இராணுவ நெருக்குவாரச் சூழல் குடாநாட்டை ஆக கிரமிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த சில நாட்களாக யாழ்.குடாநாடு ஒரு அந்நிய இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட பிரதேசமாக காட்சியளிக்கத் தொடங்கியுள்ளதை அடுத்து - அச்சமும், பீதயும் நிறைந்த முகங்களுடன் மக்கள் தாம் இதுவரை அனுபவித்துவந்த குறைந்தபட்ச இயல்புவாழ்க்கையையும் தொலைத்துவிட்டவர்களாக நடமாடுவது கவலைக்குரிய விடயமேயாகும்.

சந்திக்குச் சந்தி துப்பாக்கிகளின் விசையை அழுத்திப் பிடித்தபடி நிற்கும் படையினர்... வீதிகளில் ரோந்து வரும் படையினர்... சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகவிருக்கும் படையினரென எங்கு நோக்கிலும் உருமறைப்பு ஆடைகள் அணித்து இறுக்கமான முகத்துடன் காணப்படும் படையினரென கண்ணில்படும் காட்சிகள் யாவும் சமாதானத்தின் அஸ்தமனத்துக்கு கட்டியம் கூறுவனவாகவே உள்ளன.

புதிய ஜனாதிபதியின் பதவியேற்பும் - புதிய ஆட்சியினரின் கொள்கைப் பிரகடனமும் சமாதான சூழலுக்கான சாவுமணியாக ஒலிக்கத் தொடங்கியுள்ள இந்தச் சூழலில் மீண்டும் ஒரு போர்ச் சூழலானது புயலுக்கு முந்திய அமைதியின் வடிவத்தில் கருக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

இந்தச் சூழலை எந்தச் சிங்கள ஆட்சித் தலைமையும் ஏதோவொரு வடிவத்தில் தொடர்ந்து தக்கவைப்பதன் மூலமே பெரும்பான்மை சமூகத்தவரையும், பௌத்த மத பீடத்தவரையும் திருப்திப்படுத்த முடியுமென நினைப்பதுதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூல காரணியாகும்.

யாழ்.குடாநாட்டின் புதிய சூழல் சொல்லும் செய்தி ஒன்றை மட்டுமேயாகும் -

அதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற சந்திரிகாவின் தத்துவத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதையே மகிந்த ராஜபக்ஷவும் விரும்புகிறார் போலுள்ளது.

அந்த, அவரின் நோக்கத்தையே இன்று யாழ். குடாநாட்டில் அச்சமூட்டும் சூழல் வெளிப்படுத்துகிறது எனலாம். காலை நித்திரை விட்டெழும் குடாநாட்டு தமிழ் மக்களின் மனம் எந்தச் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைக்குள் சிக்கி அவமானப்படப் போகிறோமோ என்ற அச்சம் ததும்பும் நிலையிலேயே உள்ளது.

மக்கள் வீதிக்கு அழைக்கப்பட்டு சந்தேகத்துடன் சோதனையிடப்பட்டு, வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டு, சல்லடைபோட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டு, அப்பாவிகளை கைதுசெய்து விசாரிப்பதன் மூலம் இந்த நாட்டுக்கு அமைதியோ, சமாதானமோ எந்த யுகத்திலும் வரப்போவது கிடையாது.

மாறாக, தமது இயல்புவாழ்வுக்கு அச்சுறுத்தலாகவும், இடையூறாகவும் மேற்கொள்ளப்படும் அரசினதும், படைத்தரப்பினரதும் இத்தகைய செயற்பாடுகள் யாவும் இரு தரப்பினருக்கும் எதிரான கொந்தளிப்பு நிலையொன்றை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதே உண்மை.

அப்படியானதோர் சூழல் முழு இலங்கையையும் மீண்டும் ஒரு நிரந்தர அமைதியற்ற சூழலுக்குள் தள்ளும் ஆபத்தையே ஏற்படுத்தும் என்பதை புதிய ஆட்சியினர் புரிந்துகொள்ளாதிருப்பது பாரதூரமான துயரத்துக்கே வழிவகுக்கும்.

இப்போது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறும் நேரம். பல்வேறு வகையிலும் அரச பயங்கரவாதச் செயற்பாடுகளால் கடந்த இரு தசாப்த காலமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்விசார் உரிமைகளை நிராகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் ஏற்படுத்தப்போகும் உளவியல் ரீதியிலான தாக்கங்கள் அவர்களின் எதிர்காலத்தை எவ்வாறெல்லாம் பாதிக்கும் என்பதை விளக்கவேண்டிய தேவையே இல்லை.

கடந்த கால அரசியல் - இராணுவ ஒடுக்குமுறைகளால் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் அறிவுசார் முன்னேற்றம் எவ்வளவு அநாகரிகமான முறையில் இலக்குவைத்து அழிக்கப்பட்டது என்பதற்கு சான்றுகள் ஏராளம் உண்டு. யாழ்.. நூலகம் எரிப்பு, பாடசாலைகளை இராணுவ முகாம்கள் ஆக்கியமை, மாணவர்கள் மீதான விமானக் குண்டுத் தாக்குதல், உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்வாங்கப்பட்ட கல்லூரிகள், கற்றலுக்கான வளங்களை விநியோகிப்பதில் காட்டப்படும் பாகுபாடு... என ஒரு பெரிய பட்டியலையே இதற்குச் சான்றாகக் கூற முடியும்.

இன்றைய திடீர் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளுக்கும் இத்தகைய உள்நோக்கம் இருக்கவே செய்கிறது என்பதையும் நிராகரிக்கமுடியாது.

எவ்வாறாயினும் மகிந்தவின் சிந்தனை வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களை மீண்டும் இருள் சூழ்ந்த வாழ்வுக்குள் தள்ளும் உள்நோக்கத்தைக் கொண்டது என்பதையே சமகால அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகள் நிரூபித்து வருகின்றன.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்



செய்தி : பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பிடிக்குள் சிக்கியுள்ள ஜனாதிபதியால் நேர்மையான முறையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவே முடியாது.
- அரசியல் ஆய்வாளர்களின் கருத்து

## வெளிவாரி மாணவர்களின் பட்டமளிப்பு, படுகொலை

ஒரு இனம் தனது கலை, கலாசார பூர்வீக, பண்பாட்டு, அறிவியல் துறைகளில் தன்னை வளர்த்துக் கொள்வதற்குப் பூரண உரிமையும், சுதந்திரமும் உண்டு. இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் பறிபோகின்ற நேரங்களில் தான் விடுதலை வேண்டி வீறுகொண்டு எழுந்த, எழுகின்ற வரலாறுகள் உலகத்தில் நிகழ்ந்தும், நிகழ்ந்துகொண்டும் இருக்கின்றன. அந்த வகையில் ஈழ விடுதலைப் போராட்டமும் தன்னாட்சி உரிமைப் போரில் இறங்கி இன்று தனியரசை நிறுவுகின்ற சகல கட்டுமானங்களிலும் முன்னேறி இன,மத,மொழி, சாதி பேதமற்ற சுதந்திரத் தமிழீழம் உருவாகி வரும் இத்தருணத்தில் நாம் வெட்கப்பட வேண்டிய விடயங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

ஒரு காலத்தில் தரப்படுத்தலுக்கு எதிராக விடுதலைப் போரில் குதித்த யாழ். பல்கலைக்கழகம் இன்று அதே தரப்படுத்தல் மாதிரித்தன்மைகளை ஒரு பகுதி மாணவர்களுக்கெதிராக நிகழ்த்தி வருவது கண்டிக்கப்பட வேண்டியதும், வெட்கப்பட வேண்டியதுமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு பிரிவாக இயங்கும் வெளிவாரிப் பரீட்சைகள் அலகும், பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம் பெறும் நிறுவனம்தான். உள்வாரியாகப் பயிலும் மாணவர்கள், வெளிவாரியாகப் பயிலும் மாணவர்களென இரு வேறுபட்ட பிரிவு மாணவர்களைக் கொண்டிருக்கும் யாழ்.பல்கலைக்கழகம் - வெளிவாரியாகப் பயிலும் மாணவர்கள் மீது பல விரோத செயல்களைக் கட்டவிழ்த்து விடுவதும் உண்மை. வெளிவாரியாகப் பயிலும் மாணவர்களை ஏளனத்தோடு பார்ப்பதும், உள்வாரியாகப் பயிலும் மாணவர்கள் மத்தியில் உள்ள ஒரு உளவியல் நிலைப்பாடாகும். நாம் எல்லோரும் ஒரு வயிற்று மக்கள், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எமக்குள் ஒற்றுமை என்பது இருக்க வேண்டும். ஒரே வகையான பட்டத்தைத் தான் இருவரும் பெறுகின்றார்கள். எமது விடுதலைப் போரில் எமது மாணவர் ஒற்றுமைதான் மிகப்பெரிய சக்தி என்று எண்ணாது வெளிவாரி மாணவர்கள் ஏதோ காசுகொடுத்துப் பட்டத்தை வாங்குபவர்கள் போலவும், படிக்காதவர்கள் போலவுமே பல்கலைக்கழக சமூகத்தாலும், மாணவர்களாலும் எண்ணப்படுவது வேதனைக்குரியது.

பல்கலைக்கழக மாணவர்கள் செய்யும் போராட்டங்களுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கொடுக்கும் வெளிவாரி மாணவர்களுக்கு, அவர்களுடைய போராட்டங்களுக்கு பிரச்சினைகளுக்கு ஒன்று சேராத ஏளனப் போக்கு உள்வாரி மாணவர்கள் மத்தியில் காணப்படுவதோடு பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வெளிவாரி மாணவர்களுக்கு எதிராக அழுத்தம் கொடுப்பவர்கள[illegible]காணப்படுகின்றார்கள்.

தேசியமென்றும், தேச ஒற்றுமை என்றும் முழங்கித் திரியும் பல்கலை மாணவர்கள் தமது சகோதர மாணவர்களை (வெளிவாரி மாணவர்களை) [illegible]த்தும் விதம் என்னவாக இருக்கிறது?

தரப்படுத்தலுக்கு எதிராக, அடக்கு முறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த மாணவர் சக்தி இன்று வெளிவாரி மாணவர்களுக்காக கிளர்ந்தெழாமல் இருப்பது ஏன்? வெளிவாரி மாணவர்கள் தமிழ் மாணவர்கள் இல்லையா?(சகோதர மாணவர்கள்) அவர்கள் என்ன முட்டாள்களா? மரபில் இருந்து நவீனம் நோக்கிய சிற கடிப்புத் தான் உண்மையான சமுதாய பரிணாம வளர்ச்சி. அதுதான் தமிழீழத்திற்குத் தேவை.

எத்தனையோ சுமைகள் சோதனைகள் வசதிகள் அற்ற நிலையில்தான் வெளிவாரி மாணவர்கள் பயின்று வருகிறார்கள். பல்கலைக் கழகம் சென்றவர்கள் எல்லோரும் அறிவாளிகளும் அல்ல. வெளியில் இருப்பவர்கள் எல்லோரும் முட்டாள்களும் அல்ல. பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவர்கள் மத்தியில் பாகுபாடு காட்டுவது உண்மை. அவர்களது பரீட்சைகள் நடத்துவதில் இழுபறி, பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் இழுபறி, குளறுபடி என்று ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத்தான் ஒரு வெளிவாரி மாணவன் பட்டத்தைப் பெறுகின்றான். இதனை விட வெளிவாரி மாணவர்களை அங்கீகரிப்பதிலும், அவர்களுக்குள்ள உரிமையைக் கொடுப்பதிலும், விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் கூட தடைக்கற்களாக இருக்கின்றனர். பரீட்சைப் பழிவாங்கலும், விடைத்தாள் மதிப்பீட்டில் அசமந்தப்போக்கைக் காட்டலும் என பல்வேறு பின்னடைவுகளைச் சந்தித்த வெளிவாரி மாணவர்களுக்கு இப்போது வழங்க வேண்டிய மிகப் பெரிய கௌரவிப்பு அங்கீகாரம் சத்தமில்லாது அழிக்கப்படுவது வெளிச்சத்துக்கு வரவேண்டியவையே.

அதாவது இதுவரை காலமும் வெளிவாரித் தேர்வுகளில் சித்தியடையும் மாணவர்களுக்கு தனியாக பட்டமளிப்பு விழா நடைபெற்று வந்தது வழக்கம். ஆனால் இந்த ஆண்டிலிருந்து அதனை நிறுத்தியிருப்பது மாணவர்களை அவமதிக்கும் செயலாகும். பட்டம் பெறுவதற்கு தகுதி பெற்று வீட்டீர்கள் என அங்கீகரித்து பல்கலைக்கழக பொது பட்டமளிப்பு விழா ஏட்டில் வெளிவாரி மாணவரை பொறிக்கும் பல்கலைக்கழகம் அவர்களுக்கு பகிரங்கமாக பட்டமளிப்பு விழாவினை நடத்துவதற்கு மறுப்பது ஏன்? இதற்கு பல்கலைக்கழக முழுச்சமூகமுமே காரணகர்த்தாக்களாக இருக்கிறார்கள்.

இலங்கையின் தென்பகுதிப் பல்கலைக் கழகங் களில் கூட இவ்வாறு வேற்றுமை காணப்படுவதில்லை. அங்கே வெளிவாரிப்பட்டமளிப்பு விழாக்கள் ஆடம்பரமாகச் செய்யப்படுகின்றது. ஏன் இதனைவிட யாழ்ப்பாண உயர்தொழில்நுட்பக் கல்லூரி பட்டமளிப்பு விழாக் கூட கொழும்பில் ஆடம்பரமாக நடைபெறும்போது யாழ் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு மட்டும் பட்டமளிப்பு விழா மறுக்கப்படுவது ஏன்? வெளிவாரி அலகிடம் பெருந்தொகையான நிதி வளம் இருக்கிறது. இதனை விட அண்மையில் வெளிநாடுகளில் இருந்து கூட நிதி கிடைத்திருப்பதாகத் தகவல். அவைகள் எல்லாமே எங்கே? வெளிவாரி அலகே பொறுப்பெடுத்து ஏன் பட்டமளிப்பு விழாவைச் செய்யக் கூடாது?

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் ஆசிய நாடுகளின் கல்வித் தரம் வளர்ச்சி அடைய வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கூற்றாகும். அதற்கமைய தனியார் பல்கலைக்கழகங்களின் உருவாக்கம் அவசியமாகும். இவ்வேளையில் இருக்கின்ற வெளிவாரிப் பட்டமளிப்பு விழாவை இல்லாமல் செய்வது தவறு. பரீட்சையில் வெற்றி வெறும் மாணவர்களை கௌரவப்படுத்தி நிகழ்த்தப்படுவதே பட்டமளிப்பு விழா. அத்தகைய கௌரவம் வெளிவாரி மாணவர்களுக்கு மறுக்கப்படுவது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

விடுதலைப் போரில் தனியரசை எதிர்நோக்கும் ஒரு இனத்தின் கல்விச் செயற்பாடுகளிலேயே இத்தனை பாகுபாடு. பொங்குதமிழ் பொங்கிய பல்கலை மாணவர்களே உங்களுக்குள்ளேயே பாகுபாடு எதற்கு? வெளிவாரி மாணவர்கள் வேறு யாருமல்ல. உங்கள் நண்பர்கள், சகோதரர்கள், உறவினர்கள். அவர்களுக்கே இப்படிப்பட்ட துரோகம் இழைப்பது கண்டும் தூங்கியா இருப்பீர்கள்? மாணவர் ஒற்றுமை என்பது வெறும் பேச்சளவில் மட்டும் தான் இன்று காணப்படுகின்றது. மாணவர் தூய்மை அழிந்து போனால் வலிமை மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியாது. மாணவர்களே! கல்விச் சமுகமே! ஒரு மாணவ சமூகம் சத்தமில்லாமல் சாகடிக்கப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழகம் தனக்கென்று சில சட்ட வரைபுகளையும், மரபுகளையும் கொண்டு மாணவர்களுக்கு கௌரவம் வழங்க மறுப்பது கண்டிக்கப்பட வேண்டியது. இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? நவீனத்தை நோக்கிய எமது இலட்சியப் பயணத்தில் இந்தக் கறை படிந்த அத்தியாயங்களை மாற்றப் போவது எப்போது?

- ஒரு வெளிவாரி மாணவன் -

# 2006 இல் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கும் மகிந்தவின் சிந்தனை



சிறீலங்காவின் ஆட்சித்தலைவரும், நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ச, 2006 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து உரையாற்றியுள்ளார். 2006ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே முன்னரும் ஒரு வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. அதனை அப்பொழுது நிதி அமைச்சராக இருந்த சரத்அமுனுகம நாடாளுமன்றத்தில் முன்வைத்திருந்தமை குறிப்பிடப் படவேண்டியதாகும். நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப்போவதால் வரவு - செலவுத்திட்டத்தை அந்தத் தேர்தல் முடிவடைந்த பின்பு, புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் புதிய நிதியமைச்சர் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வருவதே நல்லது. தேர்தல் நடைபெறும் சமயத்தில் வரவு - செலவுத்திட்டம் கொண்டு வருவது ஆளும் கட்சி வேட்பாளருக்குச் சாதகமாக அமையும். ஜனநாயகப் பண்புகளுக்கு ஒத்ததல்ல என்று எதிர்க்கட்சியினரும், நடுநோக்கர்களும் கூறியிருந்தனர். அன்றைய ஜனாதிபதி, தான் வெளிநாட்டில் இருந்த பொழுது அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதால், தான் அதில் தலையிட்டு வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதைத் தள்ளிவைக்க முடியாது என்று கூறியிருந்தார். அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் கூடிய அமைச்சரவையின் தீர்மானப்படியே சரத் அமுநுகம வரவு - செலவு திட்டத்தைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

**மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்பட்டது**

சரத் அமுனுகமவினால் கொண்டுவரப்பட்ட வரவு - செலவுத்திட்ட உரையை எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புறக்கணித்தது. ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பினர் நிதி அமைச்சர் உரையை வாசித்துத் திட்டங்களை அறிவித்த பொழுது மேசையில் கைகளைத் தட்டி வரவேற்றனர். இவ்வாறு மேசையைத் தட்டி வரவேற்பது சிறந்த அறிவித்தல்கள் என்பதனைக் காட்டும் நாடாளுமன்ற முறையாகும். தேர்தல் மேடைகளில் கூட வரவு - செலவுத்திட்டத்தில் மகிந்தவின் சிந்தனைகள் இருப்பதாகப் பேசினார்கள். ஆனால், தேர்தலில் வெற்றிபெற்ற மகிந்தா - சரத்அமுனுகமவின் வரவு செலவுத் திட்டத்தை அப்படியே வீசி எறிந்துவிட்டார். மகிந்தவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி சரத் அமுனுகம கொண்டு வந்த வரவு -செலவுத்திட்டம் அதே மகிந்த தலைமையிலான புதிய அமைச்சரவையால் வீசி எறியப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

வேறு ஒரு நாட்டிலென்றால் கூட்டுப் பொறுப்புள்ள அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகாரம் அதை ஏற்காது விட்டிருந்ததால், அமைச்சரவையிலிருந்தே அவர் விலகியிருப்பார். ஆனால், இங்கு அவ்வாறில்லை. வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான செலவு, அதனை நாடாளுமன்றத்தில் கொண்டுவருதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்டிய செலவு என்பன மக்களின் வரிப்பணமேயாகும். எனவே, தெரிந்திருந்தும் வரவு - செலவுத் திட்டத்தை முதன் முறை கொண்டு வந்ததன் மூலம் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

**யுத்த முனைப்புப் பெறும் வரவு - செலவுத்திட்டம்**

சரத் அமுனுகம கொண்டு வந்த வரவு - செலவுத்திட்டத் தின் மூலம் ஏழாயிரம் கோடி ரூபாய்கள் பாதுகாப்புச் செலவினத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இது - இதுவரை இத்துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் அதி கூடிய தொகை என்று கூறப்பட்டது. சிங்கள ஆட்சி யாளர்கள் உதட்டளவில் சமாதானம் என்று பேசிக் கொண்டு, தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளை நசுக்கு வதற்கு ஆயுதப்படைகளைப் பலப்படுத்தவே இவ்வாறு கூடிய தொகையைப் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்குகின்றது என்று கூறப்பட்டது. ஆனால், இப் பொழுது புதிய வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மேலும் இரண்டாயிரம் ரூபாய்கள் அதிகமாக்கி பாதுகாப்புத்துறைக்கு ஒன்பதாயிரம் ரூபாய்கள் ஒதுக்கப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன. இதை நோக்கும் பொழுது இது யுத்தத்துக்கான வரவு - செலவுத் திட்டமாகவே கருதவேண்டியுள்ளது. உதட்டளவில் சமாதானம் என்று கூறி உலகத்தை ஏமாற்றிக் கொண்டு யுத்தத்தின் மூலம் தீர்வு ஒன்றைத் திணிக்கலாம் என்பது சிறீலங்காவின் புதிய சனாதிபதிகளின் திட்டமாகும். இதைத் தான் சந்திரிகாவும் செய்தார், ரணிலும் செய்யமுற்பட்டார், அவருக்குப் பதவிகிட்டவில்லை, மகிந்தவும் செய்ய முற்பட்டுள்ளார் என்பதே உண்மை யாகும்.

**வெள்ளைப் புலிகளுக்கு அழைப்பு**

சிறீலங்காவின் சனாதிபதித் தேர்தலின் போது நோர்வேயை சமாதான அனுசரணையாளர் பொறுப் பிலிருந்து நீக்குவது என ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய திட்டமாக மக்கள் முன்வைக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச - ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் தனித்தனியாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்திலும் இதற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. சமாதான ஒப்பந்தம் கையெழுத்திட்ட காலத்திலிருந்தே நோர்வே அரசுக்கெதிராக சிறீலங்காவில் எதிர்ப்பியக்கங்களை நடத்தியமையும், அந்நாட்டுத் தேசியக்கொடியை எரித்தமையும் நோர்வே புலிகளுக்கு உதவுகின்ற நாடு என்றும், அதனால் அவர்களை வெள்ளைப் புலிகள் என்று சிங்கள மக்கள்முன் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நோர்வேயை அகற்றிவிட்டு, இந்தியாவை அந்த இடத்துக்கு கொண்டு வருவதெனவும் கூறப்பட்டது. தேர்தல் முடிந்து வெற்றி பெற்றுச் ஜனாதிபதியாகிய மகிந்த ராஜபக்ச இந்தக் கொள்கையையே அறிவித்திருந்தார். அதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபட்டார். மகிந்த ராஜபக்சவின் இந்த அணுகு முறைக்கு அவர் கூறிய காரணம் - ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள்ளும், கெளரவமான சமாதானமும் ஏற்படவழி காண்பதே தனது நோக்கம் என்பதாகும். இதன் முதற்படியாக வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்குச் சென்றார். அங்கு அவர் இந்திய ஆட்சியாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் அவர் நினைத்த வெற்றியைக் கொடுக்கவில்லை. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை சேராது என்பது போல் இந்தியாவும், அனுசரணையாளர் என்ற இடத்திற்கு வர விரும்பவில்லை. ஒரு பக்கம் புலிகளைத் தடை செய்து வைத்துக் கொண்டு எவ்வாறு நடுவு நிலையுடன், நம்பகத் தன்மையுடன் செயற்படமுடியும். கிட்ட வந்து மூக்கை நுழைப் பதிலும் பார்க்க எட்ட இருந்து சட்டாம் பிள்ளையாக இருப்பது மேல் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும். தற்போதைக்குப் புலிகள் மேலுள்ள தடையை நீக்க விரும்பவில்லை. அது பல பிரச்சினைகளை உள்நாட்டில் ஏற்படுத்தும். என்ன தான் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக்கொண்டிருந்தாலும், பேச்சுவார்த்தை அனுசரணையாளர் என்ற நிலையில் பக்கச்சார்பாக நடக்க முடியாது. அதற்குக் கூட்டணிக் கட்சிகளான தமிழகக் கட்சி கள் எல்லாம் ஒத்து ஊதமாட்டா. எனவே,நோர்வேயின் அனுசரணையை இந்தியா உணர்த்தியுள்ளது. எனவே, மகிந்த ராஜபக்சவும் நோர்வேயை அனுசரணையாளராக இருக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளார். அதாவது வெள்ளைப் புலிகளை, புலிகள் - சிறீலங்கா அரசுக்கான சமாதான நடவடிக்கைக்கான அனுசரணையாளராக மகிந்த ராஜபக்ச ஏற்றுள்ளார். ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் வெள்ளைப் புலிகளை அழைத்தது பற்றி இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை மெளனமாகவே உள்ளனர்.

**2006இல் நாடாளுமன்றத் தேர்தலா?**

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதவியை மகிந்த அடைந்து விட்டாலும், நாடாளுமன்றத்தில் நிம்மதியான பெரும்பான்மை அவரிடம் இல்லாதது பெரிய இடைஞ்சலாகும். ஜே.வி யியை நீண்ட நாள்களுக்கு நம்பியிருக்க முடியாது. ஜாதிக ஹெல உறுமயவும் தனி வழியே செல்லும். அத்துடன் நோர்வை அனுசரணையாளராக அழைத்ததை இவ்விருகட்சிகளும் விருப்பாததும், மகிந்த நன்கு அறிந்ததே - எனவே, நாடாளுமன்றத்தில் தனது கையைப் பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளார் மகிந்த. இது அவருக்குப் பாரிய சவாலாக இருந்தாலும் நிறை வேற்று அதிகார சனாதிபதிப் பதவி மூலம் அதை அடைய அவர் முயற்சி எடுப்பார். இதற்கு முதலில் அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தன்கைப் பிடிக்குள் கொண்டு வரவேண்டும். தற்பொழுது அக்கட்சியின் தலைமைப் பொறுப்பில் உள்ள சந்திரிகாவிடமிருந்து அதனை எப்படியும் தான் கைப்பற்றி விடவேண்டும் என்ற நிலையில் அவர் உள்ளார். சந்திரிகாவைப் பகைத்துக் கொண்டு கைப்பற்றுவதா? அல்லது அவருடைய ஆதரவு அதைக் கைப்பற்றுவதா என்பதே கேள்வி. சந்திரிகாவின் பல செயல்களை மாற்றியமைத்து வரும் மகிந்த, அவருடன் சமரசத்துக்கு வருவது கடினமானதே. எனவே, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்திருப்பதன் மூலம் இதைச் சாத்தியமாக்க அவர் முயற்சிக்கிறார் என்பது தெரிகின்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை அவருக்குக் கிடைத்துவிடுமானால் கட்சி பிளவுபடுவது குறையும். தலைமைப் பதவி சந்திரிகாவி டமே தொடருமானால் இவர் நினைத்த மாதிரி நடக்கமுடியாது. எனவே தான் முதலில் கட்சியைக் கைப்பற்றி விட்டு பின்பு மலையகத் தமிழ் மக்களையும், பிரிந்து நிற்கும் முஸ்லிம்களையும் தனது பக்கம் இழுக்க முயற்சிப்பார். இவ்வாறு மலையக மக்களைக் கவரும் விதத்தி லேயே சில திட்டங்களை வரவு செலவுத்திட்டத்தில் முன்வைத் துள்ளார். இதே போன்றே முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ள முயற்சிக்கிறார். இவர் களே ரணில்லுக்குக் குறிப்பிடத்தக்க வாக்குகளை அளித்தவர்கள். எனவே, இந்த மக்களின் வாக்குகளைப் பெறமுடியுமானால் ஐக்கிய தேசியக் கட்சியின் விகிதாசாரம் குறையும் என்ற கணிப்பு உண்டாகின்றது. இந்நிலையில் சமாதானம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு இராணுவ அடக்கு முறைக்குள் தமிழ் மக்களைத் தள்ளிவிட்டு இனவாதக் கருத்துக்களை சிங்கள மக்களிடம் வைப்பதன் மூலம் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ளலாம். என்று கணக்குப் போடுகின்றார். எனவே, இந்த வரவு - செலவுத்திட்டம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை மையப்படுத்தித் தயாரிக்கப்பட்டதாகவே தோன்றுகின்றது. நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி ஜே.வி.பியின் பலத்தைக் குறைப்பதன் மூலம். இடைவெளி அதிகரித்துள்ளது.

ஆனால், இவரால் சமாதானம் என்ற பெயரில் உரிமைகள் இல்லாமல் தமிழினத்தை நீடித்து வைத்திருக்க முடியுமா என்பதற்குப்பதில் தேசியத் தலைவரின் மாவீரர் உரையில் இருக்கின்றது. அது மட்டுமல்ல, நோர்வே நாட்டின் பிரதமர் இந்தியாவில் கூறிய கருத்துக்களையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் சம்மதிக்கும் பட்சத்தில் நோர்வே சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்படும். ஆனால், இருபகுதியினருக்குமான இடைவெளி அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இடைவெளி ஏன் அதிகரித்துள்ளது என்பது யாவருக்கும் தெரிந்ததே. தமிழர் தாயகம், சுயநிர்ணயம் என்பவற்றை ஏற்றுக்கொள்ளாத ஒற்றைஆட்சிக்குள் தீர்வு - கெளரவமான சமாதானம் என்ற தொனிகள் இடைவெளியைப் பெரிதாக்கியுள்ளமை அங்கே தெரிகிறது. அத்துடன் தமிழர் தாயகப் பகுதிகளில் மனித உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுவது அந்த இடைவெளிஅதிகரிப்பதற்கான காரணமாகும்.

இராணுவப் புலனாய்வுத் துறையினரும், அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப் படைகளும் தமிழ் மக்களைச் சுட்டுக் கொல்வது பலராலும் கணடிக்கப்பட்டு வருவது கண்கூடு. இவ்வாறான கொலைகள் தொடர்வதை தமிழ் மக்கள் மேலும் அனுமதிக்கப் போவதில்லை என்பதையும். அதற்கான எதிர் விளைவுகளும், மாணவர்களின் எழுச்சியும் தமிழ் மக்களுக்கும், சிங்கள அரசுக்கும் இடையிலான வேறுபாடுகளையும், இடைவெளியையும் துலாம்பரமாக வெளிக் காட்டுகிறது.

எனவே, அநுசரணைப் பொறுப்பில் ஈடுபட்டுவரும் நோர்வேக்கு இது பெரிய சவாலாகவே அமையும். சிறிலங்காவின் புதிய அரசு உலகத்தையும் ஏமாற்றி, தமிழ் மக்களையும் ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து கொள்ளும் காலம் விரைவில் வரும் என்று எதிர் பார்க்கலாம்.

**சிலம்பு**

---

மருத்துவம் பகுதி VII

## நீரிழிவு நோயாளர்களின் உணவு முறை அறிவுறுத்தல்

நீரிழிவு நோயாளிகளே! அவர்தம் உறவுகளே! மாணவர்களே! ஆர்வலர்களே! உங்களுக்காகவே நீங்கள் வைத்தியம்பெறும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் 18.12. 2005 ஞாயிறுக் கிழமை காலை 08.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நீரிழிவு நோய்பற்றிய விளக்கங்களை அளிக்கவிருபதுடன், உங்கள் வினாக்களுக்கும்பதில் தரவுள்ளனர். இந்த இலவச அறிவூட்டல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அறிவைப்பெறுவதுடன், நீரிழிவு நோய் பற்றிய நூலையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்காகவே நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள். இதனையொட்டி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரமாகிறது.

### நீரிழிவு நோயாளர்களின் உணவு முறை பற்றிய அறிவுறுத்தல்கள்.

**1. அடிக்கடி பாவிக்கக் கூடிய உணவு வகைகள் (free foods)**

- தேநீர் / கோப்பி (சீனி,பால் அற்ற) தக்காளி / தேசிக்காய் பழச்சாறு (சீனி அற்ற)
- இரசம் (Plan Soda / ¼நாள்.
- பச்சை காய்கறி வகைகள் -பொன்னாங்காணி, போஞ்சி, புடல், பயற்றங்காய், கீரை வகை, பாகற்காய், இலைக்கோவா, லீக்ஸ், வெண்டிக்காய், முருங்கை இலை, சிறுகுறிஞ்சா இலை, வல்லாரை, பசளி, வெள்ளரிக்காய்.

மேற்கூறிய பச்சை காய்கறிகள் இலை வகைகள் மூலம் தயாரிக்கப்பட்ட சூப் (Soup)

**2. தவிர்க்கப்பட வேண்டிய உணவு வகைகள் (Foods to de Avoided)**

- சீனி, தேன், சக்கரை , ழுழிது
- இனிப்பு வகைகள் (all Sweets) - ரின்பால், பாயாசம், ஐஸ்கிறீம், மற்றும் மோல்ரற் பால் (நெஸ்டமோல்ட், வீவா, கோர்லிக்ஸ், ஓவல்ரின் , Boost)
- தவிடு நீககிய தானிய வகைகள் மற்றும் அதில் தயாரிககப்பட்ட உணவு வகைகள் (கோதுமைமா, வெள்ளை அரிசி, வெள்ளைப்பாண், கேக், Jelly)
- கொழுப்பு உணவுகள் (பட்டர், நெய், சீஸ்,தேங்காய் எண்ணெய்)
- அதிக கலோரி கொண்ட பழவகைகள் - (வாழைப்பழம், மாம்பழம், பேரீச்சை, திராட்சை, வீளா,பலா, Avacado)
- கிழங்கு வகைகள் - (உருளைக்கிழங்கு, வற்றாளைக் கிழங்கு மரவள்ளிக் கிழங்கு, கரணைக்கிழங்கு)
- குளிர் பானங்கள் மற்றும் பழச்சாறுகள்
- பருப்புவகைகள் - முந்திரிப்பருப்பு, நிலக்கடலை.
- பொரித்த உணவுகள், முட்டை மஞ்சள் கரு, தகரத்திலடைத்த உணவுகள், இறால், நண்டு, சொசேஜ்/ சோஸ் (Saurce) மற்றும் ஊறுகாய்.

**தேவையான அளவு அல்லது சராசரியாக உண்ணக் கூடிய உணவுகள்**
**( Foods in linited quantity)**

- தானியங்கள் மற்றும் கடலை வகைகள்
- காய்கறிகள் - பச்சை பீற்றூட், கரட், வாழைக்காய்.
- பழவகைகள் - ஆரஞ்சு, பப்பாசி, அப்பிள் (100g/ Day)
- ஆடை நீக்காத முழுப் பால்/பால்மா உணவுகள் நாள் ஒன்றுக்கு 400 அட இலும் குறைவாக உள்ளெடுத்தல்.
- மீன், கோழி இறைச்சி என்பன கிழமைக்கு நான்கு நாட்கள்
- ஆட்டிறச்சி, மாட்டு இறைச்சி என்பன கிழமைக்கு ஒரு தடவை.
- முட்டை - கிழமைக்கு இரண்டு.
- முட்டை வெள்ளைக் கரு தாராளமாக உண்ணலாம்.
- சமையலின் போது பாவிக்கப்படும் எண்ணெய் வகைகள், Sunflower oil/ தேங்காய் எண்ணை - (30 g நாள் ஒன்றுக்கு, அதாவது 4-5 தேக்கரண்டி எண்ணெய் பாவிக்கப்படலாம் நாள் ஒன்றுக்கு)

*பழவகைகள்* - பப்பாசி (2x7 துண்டு, சிறியது 1/4, பெரியது 1/8)

- வாழைப்பழம் - 1(கதலி)
- Apple - 1/2 சிறியது (தோலுடன்)
- கொய்யாப்பழம் - 1 சிறியது
- ஆரஞ்சு - 1/2 சிறியது.

நன்கு பழுத்த பழங்களை விட, நன்கு கனியாத பழங்கள் நீரிழிவு நோயாளிக்குச் சிறந்தது.

பழச்சாறுகளை விடவும், நாருடன் கூடிய உடன் பழங்கள் இரத்தில் சீனியின் அளவை சீராக வைத்திருக்க உதவும்.

இரத்தில் சீனியின் அளவு வழமை நிலையை விட குறையுமாயின் சுயநினைவற்ற நிலை,மயக்கம், நடுக்கம், பார்வை மங்குதல் போன்ற அறிகுறிகள்தென்படும். அப்படியான நேரங்களில் 2 கரண்டி கரைத்த சீனி, அல்லது 2 கரண்டி குளுக்கோசை உடனடியாக உட்கொள்ளவும்.

நீங்கள் அடிக்கடி பயணிப்பவராக இருந்தால் எப்பொழுதும் உங்கள் கைப்பையில் toffee மற்றும் Kandos போன்ற இனிப்பு வகைகளை எடுத்துச் செல்லுங்கள், இப்படியான அறிகுறிகள் தோன்றுமிடத்தில் நீங்கள் உடனடியாக அவற்றை உள்ளெடுக்க முடியும்.

மேற்கூறிய அடிக்கடி நிகழுமாயின் வைத்தியரின் ஆலோசனையை நாடவும்.

(தொடரும்...)

இ.சிவசங்கர்
4ஆம் வருட மருத்துவ பீட மாணவன்

# பலாலி விமானத்தளம் புனரமைப்புக்கு இந்தியா உதவுவதை நிறுத்த வேண்டும்

## உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

இராணுவத்தினரின் தனிப்பட்ட நலனுக்காக இந்திய அரசு பலாலி விமானத் தளத்தைப் புனரமைப்பதற்கு உதவ முன்வந்துள்ளமை தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதாக அமையும். எனவே, இந்திய அரசு பலாலி விமானத்தளத்தைப் புனரமைப்பதற்காக வழங்கும் உதவியை உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையத்தால் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பிவைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழர் தாயகத்தின் வலிகாமம் வடக்கிலுள்ள விமானப்படைத் தளத்தைப் புனரமைப்பதற்கான அனுசரணையைத் தங்கள் நாடு இலங்கைக்கு வழங்குவதையிட்டு அதிர்ச்சியடைகிறோம். இராணுவ நோக்கத்தை - நலனை மட்டும் கருத்தில் கொண்டு இலங்கை அரசு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைக்கு இந்தியா துணை போவது ஈழத்தமிழர்களை மிக மோசமாகப் பாதிக்கும் என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பலாலி விமானத்தளத்தை விஸ்தரிப்பதோ, புனரமைப்பதோ பயணிகள் விமானப் போக்குவரத்துக்காக அல்ல என்பதையும், அது தமிழர் தாயகத்தில் குறிப்பாகக் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினரது தேவைக்காகவே என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இது பலவீனம் அடைந்திருக்கும் இலங்கைப் படைகளை மேலும் வலுப்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தவே துணை செய்யும் என்று நாம் திடமாக நம்புகிறோம். இது இப்போது ஆட்டம் கண்டிருக்கும் இலங்கைத்தீவின் சமாதானத்தையும் உடன் சாய்த்து விழுத்துவதற்கு ஏதுவாக அமையும்.

ஏற்கனவே பலாலி விமானப் படைத் தளத்தை இலங்கைப் படையினர் இராணுவத் தளமாகவும், அதனைச் சூழவுள்ள பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயமாகவும் வகைப்படுத்திக் கொண்டிருப்பதால் - முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் அகதிமுகாம்களில் இருக்கின்றனர். சுமார் இருபது வருடகாலமாக நீடிக்கும் இந்த மக்களின் துன்பியல் வாழ்வு முடிவுக்கு வரவில்லை.

இந்த நிலையில் மேலும் பலாலி விமானத் தளத்தை விஸ்தரிப்பது, பாதிக்கப்பட்ட மக்களை இன்னும் நீண்டகாலத்துக்குத் தவிக்க விடுவதோடு, மேலதிகமாகப் பல ஆயிரம் மக்களைக் குடியெழுப்பவும் துணை போய்விடலாம் என்று அஞ்சுகிறோம்.

எனவே, யாழ். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவேண்டும் என்று தமிழ் மக்கள் எல்லோரும் விரும்புகின்ற நிலையில், அதற்கு முரணாக இலங்கை அரசுக்கு இந்தியா துணைபோவது சரியானதல்ல. இது தமிழ் மக்களின் அதிருப்தியைச்சம்பாதிப்பதாக அமையும்.

கடந்த தசாப்தத்தின் கசப்பான அனுபவங்களை மறந்து செயற்படுவதற்குத் தமிழ் மக்கள் விரும்புகின்ற சூழ்நிலையில் இவ்வாறானதோர் நடவடிக்கை அதற்கு ஒருபோதும் உறுதுணையாகமாட்டாது.

ஆகவே, ஈழத் தமிழ் மக்களின் நலன்களையும் கருத்தில் கொண்டு இலங்கை அரசின் பலாலி விமானத் தளத்தை விஸ்தரிக்கும் கபடநோக்கத்திற்கு துணைபோகாதிருக்குமாறு அனைத்துத் தமிழ்மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சுரேஸ் மேத்தா நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

(படம்;- இராணுவ ஊடகப்பிரிவு)

# விமானத்தளம் விஸ்தரிப்புக்கு உதவும் முடிவை இந்திய அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்—

பலாலி விமானத்தளம் விஸ்தரிப்பதற்கு இந்திய அரசு இலங்கைக்கு உதவு வதற்கு எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் தாயக பூமியான யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இன்று இயங்கிக் கொண்டிருக்கின்ற பலாலி விமானப்படைத்தளம் விஸ்தரிப்புக்கு தங்களது அரசாங்கம் உதவிபுரிவதற்கு முன்வந்தமை தமிழ் மக்களாகிய எமக்கு பெருவேதனையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், இந்த விமானப் படைத்தளம் அமைந்துள்ள பகுதி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்கள். இந்த மக்கள் 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளவும் குடியேறுவதற்காகப் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலும் நீங்கள் எடுத்த இந்த முடிவு தமிழ் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தினது ஆக்கிரமிப்புக்குக் கொடுக்கின்ற நற்சான்றிதழாகவும், ஆக்கிரமிப்புக்கு அனுசரணை வழங்குவதாகவும் அமைகின்றது.

எனவே, தங்களிடம் நாம் தாழ்மையுடன் வேண்டிக் கொள்வது யாதெனில், எமது பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும் என்ற அடிப்படையில் உங்கள் அரசு இந்த விமான நிலைய விஸ்தரிப்புக்கான உதவி புரிதலை மீள் பரிசீலனை செய்யுமாறு தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளைத் தடைசெய்யக் கோரும் பேரணி கொழும்பில் பிசுபிசுப்பு!




கொழும்பு—

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐரோப்பிய யூனியன் தடைசெய்ய வேண்டும் எனக் கோரி நேற்றுமாலை கொழும்பில் கடும் போக்காளர்கள் பேரணி ஒன்றை நடத்தினர்.

பிற்பகல் 3 மணியளவில் விகார மாதேவி பூங்காவில் ஆரம்பித்த இந்தப் பேரணி - ஐரோப்பிய யூனியனின் தூதரகம் வரை இடம்பெற்றதாகவும் - பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் மிகக் குறைந்தளவானோரே பங்குபற்றியதாகவும் தெரியவருகிறது.

படம்:- ஏபி

# கண்காணிப்புக்குழு - புலிகள் மன்னாரில் சந்தித்து பேச்சு!

மன்னார்—

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறையினருக்குமிடையில் நேற்றுச் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

வட்டக்கண்டல்,சாளம்பைக் குளம் மாவட்டத்திட்டமிடல் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இயல்பு வாழ்க்கையில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளமை, மற்றும் படையினரின் தற்போதைய தேடுதல் நடவடிக்கைபோன்ற விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட், மன்னார் மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் றொபென்சன், தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் வேங்கை, மன்னார் மாவட்டச் சமாதானச் செயலக இணைப்பாளர் சூசை ஆகியோர் பங்குகொண்டனர்.

# துப்பாக்கி வெடித்து சிப்பாய் காயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - கல்லடி இராணுவ முகாமில் தனது துப்பாக்கியைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அந்த இராணுவச் சிப்பாய் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காயமுற்ற சிப்பாய் தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பூகம்ப இடிபாடுகளுக்குள் 64 நாட்களை கழித்த பெண்!

## உயிருடன் மீட்கப்பட்ட அதிசயம்

இஸ்லாமாபாத்—

பாகிஸ்தானில் பூகம்ப இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த பெண் ஒருவர் 64 நாட்களின் பின்னர் மீட்கப்பட்ட அதிசயம் இடம்பெற்றிருக்கிறது.

பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் கடந்த ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியால் பாகிஸ்தானில் சுமார் 73 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்து, பல லட்சக்கணக்கானோர் வீடுகள் இழந்து நிர்க்கதி நிலையில் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பூகம்ப இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளூர்வாசிகள் பூகம்ப சிதைவுகளை அகற்றிக் கொண்டிருந்தபோது - அதனுள் உயிருடன் பெண் ஒருவர் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். நஹ்ஹா பீபி என்ற இந்தப் பெண் 64 நாட் களாகப் பூகம்பச் சிதைவுகளுக்குள் சிக்கிப் போயிருந்தார் என்று குறிப்பிட்டனர்.

இவ்வாறு நீண்ட காலம் பூகம்பச் சிதைவுகளுக்குள் எவரும் உயிர்வாழ்ந்தது கிடையாது என்றும் - உயிருடன் மீட்கப்பட்ட இந்தப் பெண்ணுக்கு பாகிஸ்தான் மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மாதங்களுக்கு மேலாக உணவு, குடிநீர் இல்லாமல் இந்தப் பெண் உயிர் வாழ்ந்தது ஒரு பேரதிர்ச்சியாகும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# எண்ணெய்க் குழாய் வெடித்து அமெரிக்காவில் 5பேர் உயிரிழப்பு!

நியூயோர்க்—

அமெரிக்கா - நியூஜெர்சி பகுதியிலுள்ள எண் ணெய்க் குழாய் மற்றும் எரிவாயுக் குழாய் என்பனவற்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 5பேர் பலி யாகினர். மேலும் 58 பேர் காயமடைந்தனர்.

லண்டன் பன்ஸ்பீல்ட் பகுதியிலுள்ள எண்ணெய்க்கிணறு வெடித்ததில் ஏராளமான வீடுகள் தரை மட்டமானதுடன், 10 பேர் உடல் கருகிப் பலியாகினர். எண்ணெய்க் கிணற்றில் 3 நாட்களாகத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. நவீன கருவிகளுடன் தீயணைப்புப் படையினர் பேராடித் தீயை அணைத்தனர். இதில் தீவிரவாதிகளின் சதித்திட்டம் பற்றி விசாரணை நடந்து வருகிறது.


இந்த நிலையில் அமெரிக்காவில் நியூஜெர்சி பகுதியி லுள்ள எண்ணெய்க்குழாய் திடீரென்று வெடித்ததில் அந்தப் பகுதியிலுள்ள காஸ் குழா யும் வெடித்தது.

அதில் அங்குள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு தீப்பிடித்து எரிந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.




# கூண்டுக்குள் இருப்பதாக நான் ஒருபோதும் நினைக்கவில்லை!

## இப்படிச் சொல்கிறார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்



வொஷிங்டன் —

நான் ஒன்றும் கூண்டுக்குள் இருப்பதாக நினைக்கவில்லை. வெள்ளை மாளிகைக்கு வெளியே என்ன நடக்கிறது என்பதை நன்கு தெரிந்தே வைத்துள்ளேன் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகைக்கு வெளியில் என்ன நடக்கிறது என்பது அமெரிக்க ஜனாதிபதிக்குத் தெரியவில்லை என விமர்சனங்கள் எழுந்தன. மேலும் சில ஆண்டுகளுக்கு முன்பு அவர் அளித்த பேட்டி ஒன்றில் தான் பத்திரிகைகளை படிப்பதில்லை என்றும் கூறியிருந்தார்.

இந்தநிலையில் ஜனாதிபதி புஷ்ஷை என்.பி.சி, நைட்லி நியூஸ் என்ற தொலைக்காட்சி பேட்டி கண்டது. இந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது -

வெளியில் என்ன நடக்கிறது என்பதை நான் அறியாமல் இருப்பதாகக் கூறப்படும் விமர்சனத்தை மறுக்கிறேன். உண்மையில் வெள்ளை மாளிகைக்கு வெளியில் என்ன நடக்கிறது என்பது குறித்து நான் முழுமையாக அறிந்தே வைத்துள்ளேன். நான் ஒன்றும் கூண்டுக்குள் இருப்பதாக நினைக்கவில்லை.

நல்ல ஆலோசனைகளை திறமை மிகுந்த நபர்களிடமிருந்து தொடர்ந்து பெற்று வருகிறேன். பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக சாதாரண வாழ்க்கையில் உள்ள சுகங்களை அனுபவிக்க முடியவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

வீட்டு வாசலை விட்டு நான் சுலபத்தில் வெளியே சென்றுவிட முடியாது. கடைக்குச் சென்று ஏதாவது பொருட்கள் வாங்கி எனது காதல் மனைவிக்கு அன்புடன் அளிக்க முடியவில்லை.

தினந்தோறும் காலையில் பத்திரிகைகள் படிக்கிறேன். அதிலுள்ள ஒவ்வொரு சிறு செய்திகள் உட்பட எல்லாவற்றையும் படிக்கிறேன் என்று கூறமாட்டேன். ஆனாலும் அன்றைய தினம் என்ன செய்தி என்பதை நான் நிச்சயம் அறிந்து கொள்வேன். எப்போதாவது தொலைக்காட்சி பார்ப்பதுண்டு. ஆனாலும் செய்திகளின் சாராம்சத்தை நான் அறிந்தே வைத்திருப்பதுண்டு. என ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மன்னாரில் சுற்றிவளைப்பு; 15 பேர் கைதாகி விடுதலை!

மன்னார் —

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது 15 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார் நகர், பேசாலை, கரிசல், உப்புக்குளம், மூர் வீதி ஆகிய இடங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவைளத்து தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது வயது வேறுபாடின்றி அனைவரதும் அடையாள அட்டைகளை படையினர் பதிவுசெய்தனர். அத்துடன் வீடுகளுக்குள் நுழைந்த படையினர் சல்லடை போட்டு தேடுதல் நடத்தினர்.

அத்துடன், பேசாலை, உப்புக்குளம் பகுதியில் வீதிகளால் செல்லும் மக்கள் மற்றும் வாகனங்களில் செல்வோர் இறக்கி சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் 15 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, மன்னாரில் மூன்று வீதிகள் இராணுவத்தினரால் முட்கம்பி வேலிகள் போடப்பட்டு மூடப்பட்டுள்ளன. மன்னார் வைரவர் கோவில் வீதி, தலைமன்னார் பியர், கடற்கரை வீதி, பேசாலை சேமக்காலை வீதி என்பனவே நேற்றுமுதல் மூடப்பட்டுள்ளன. (201)

# ஊர்காவலர் சுட்டுக்கொலை!



சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதையும் சுடப்பட்டவரின் சடலத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: சசிக்குமார்)

திருகோணமலை —

திருகோணமலை - பாலையூற்றுப் பகுதியில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் சுட் டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அன்ரனி சுரேஷ் என்ற ஊர்காவலர் உயிரிழந்தார்.

29 வயதுடைய இவர் இரண்டு பிள் ளைகளின் தந்தையாவார். இந்தக் கொலை குறித்த விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இந்திய இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய மக்கள் தொண்டர் படையில் அங்கம் வகித்த இவர் பின்னர் பொலிஸாருடன் இணைந்து பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விமானப்படை ஹெலி மீது...

அறுகம்பையில் இருந்து 10 வான் மைல்கள் தொலைவில் தரையிறங்குவதற்கு சற்று முன்னதாக தாழ்வாகப் பறந்துகொண்டிருந்தபோது கஞ்சிக்குடிச்சாறு பகுதியிலிருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹெலிகொப்டர்மீது 13 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபோதும் - 4 வேட்டுக்கள் மட்டுமே ஹெலிகொப்டரின் உடலிலும், காற்றாடியிலும் துளைத்து சேதத்தை ஏற்படுத்தின.

இதனையடுத்து மேற்படி ஹெலி குமணவில் உள்ள அம்பாறை விமானப்படைத் தளத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் இத்தாலிய வெளிவிவகார பிரதியமைச்சர் மஜிரிட்டா பொனிவரை அறுகம்பையில் ஏற்றச்சென்றபோதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

தாக்குதல் நடத்தப்பட்டபோது ஹெலிகொப்டரில் விமானிகளான மஹிபாலவும், காஞ்சன ஹேவகேயும் மட்டுமே இருந்தனர்.

மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீளக் கட்டியெழுப்பும் பணிகளை நேரில் பார்வையிடுவதற்கு இத்தாலிய வெளிவிவகார பிரதியமைச்சர் மஜிரிட்டா பொனிவர் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவை ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை 10.30 மணியளவில் இந்தக் ஹெலிகொப்டர் அறுகம்பைக்குச் சென்றிருந்தது.

இவர்களை இறக்கிவிட்டு பாதுகாப்புக் கருதி விமானப்படை ஹெலிகொப்டர் அம்பாறை விமானப்படைத் தளத்துக்குச் சென்றிருந்தது.

பின்னர் நேற்று மாலை 3 மணியளவில் இவர்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்காக அறுகம்பை நோக்கிச் சென்றபோது இந்தத் தாக்குதல் இடம் பெற்றது.

இந்த ஹெலியில் சூடுகள் பட்டு சேதம் ஏற்பட்ட போதும் உடனடியாகத் திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இத்தாலிய பிரதி வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட 22 பேருடன் நேற்று மாலை கொழும்பு திரும்பியது.

விமானப்படை ஹெலிகொப்டரில் ஏற்பட்டிருக்கும் சேதங்களைப் பார்க்கும்போது சிறிய ரக துப்பாக்கி ஒன்றின் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சமாதான அனுசரணைப் பணிகளில் ஆசிய நாட்டை ஈடுபடுத்த வேண்டும்!

## ஹெலஉறுமய கோருகிறது

கொழும்பு —

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணிக்கு ஆசிய நாடொன்றை ஈடுபடுத்தவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் அனுசரணைப் பணியை வகிக்க வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ள போதிலும் - அதன் நிலைப்பாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்வதன் மூலம் மாற்றமடையும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வென்பது இந்தியாவின் கொள்கையே தவிர, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கையல்ல. எனவே, இந்த விடயம் தொடர்பாக இந்தியா தனது கொள்கையை மாற்ற வேண்டும். இல்லையெனில் இலங்கை மாற்று வழியை கண்டுபிடிக்க வேண்டிவருமென அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் -

சமாதான முயற்சிகளில் நோர்வேயை அனுசரணைப் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்துவதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த முடிவை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகளை அனுமதிப்பதில்லை என்ற விடயத்தில் ஜனாதிபதி மிகவும் உறுதியாகவுள்ளார்.

சமாதான முயற்சிகளில்- அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் அல்லது ஐ.நா அதிகாரிகள் அனுசரணைப் பணி வகிப்பதை தாம் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## பிரதி அமைச்சராக வடிவேல் சுரேஷ் பதவியேற்பு!

கொழும்பு —

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ் நேற்று மாலை சுகாதார போஷாக்கு நலன்புரி பிரதியமைச்சராக பதவியேற்றார்.

இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றபோதும் - கட்சித் தலைமையின் முடிவுக்கு முரணான வகையில் இவர் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஓமந்தையில் கைது!

கொழும்பு—

போலி அடையாள அட்டை ஒன்றைப் பயன்படுத்தி ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் நுழைய முயன்ற முஸ்லிம் இளைஞர் ஒருவரை படையினர் கைதுசெய்தனர். திருமலை - கந்தளாயைச் சேர்ந்த அப்துல் ஹசன் மொகமட் அக்ஷர் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

### இரண்டாவது...

உட்படுத்தப்பட்டதுடன் வீடுகளுக்குள் நுழைந்தும் சல்லடை போட்டனர்.

இதேவேளை இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட கிராமங்களிலிருந்து க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உரிய நேரத்துக்கு பரீட்சை நிலையத்துக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை மயிலங்காட்டில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது சனசமூக நிலையம் ஒன்றின் முன்னாள் தலைவர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (13) (14)

### ஜனாதிபதியுடன்...

யையும் இணைத்துக்கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படும் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தவுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவில்- கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் இடம்பெறுவர் எனத் தெரியவருகிறது.

### இந்திய...

இந்தியக் கடற்படையுடன் இலங்கை கடற்படை கூட்டுப்பயிற்சி ஒன்றை மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும். இதற்கு முன்னர் இலங்கை கடற் படை இந்திய கடலோரகாவற் படையுடன் இணைந்து சிறியளவிலான பயிற்சிகளை மேற்கொண்டிருந்தது.

நேற்று தொழில்சார் கப்பல் முகாமைத்துவம், ஒருகப்பலில் இருந்து இன்னொரு கப்பலுக்கு படையினரை மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு உத்திகள் தொடர்பாகவும் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டுப்பயிற்சி கொழும்பு கரையோரத்திலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் இந்துசமுத்திர பிராந்தியத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### கதிர்காமர்...

அழகப்பெருமவை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கேட்டுக்கொண்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

## சுற்றிவளைப்பு, கைதுகள் நிறுத்தப்....

ளாக எமது தாக்குதல்களை இடைநிறுத்தியிருந்தோம். ஆனால், எமது மக்கள்மீது இராணுவம் தனது அராஜகங்களை தொடர்ந்தும் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதனை இராணுவம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

இதுவரை கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையேல் ஆயுதப் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கான எமது படை வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். குடாநாட்டில் 250 இற்கும் மேற்பட்ட எமது வீரர்கள் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களை நடத்த தயாராக உள்ளனர்.

இராணுவத்தினர் தமது சுற்றிவளைப்புகள், கைதுகள் என்பவற்றை உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையேல் குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமே இருக்கும். எமது ஆதரவாளர் ஒருவர் கொல்லப்படின் இராணுவத்தினர் பலர் கொல்லப்படுவர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய நீங்கள் இராணுவ் அராஜகங்களை நிறுத்துவதை உறுதிப்படுத்துவீர்களானால் - நாம் எமது தாக்குதல்களை நிறுத்தி தங்களின் அலுவலகத்துக்கு முன்னால் வரத் தயாராக உள்ளோம்.

இல்லையேல் இனிவரும் நாட்களில் இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல்கள் தொடரும். இதை யாரும் தடுத்துநிறுத்தமுடியாது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பொங்கி எழும் மக்கள் படை நேற்று மீண்டும் ஒரு எச்சரிக்கை என்ற தலைப்பில் பிரசுரம் ஒன்றை வெளியிட்டது. அதில் -

அரச கூலிகளின் அதீத ஆக்கிரமிப்பின் உச்சம் எமது தாயக நிலங்களில் அதிகரித்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அண்மைக் காலங்களில் எமது மண்ணில் இராணுவ இயந்திரத்தின் ஆக்கிரமிப்புப் போரானது- சுற்றிவளைப்பு என்றும், தேடுதல் என்றும் கைதுசெய்தல் என்றும் துன்புறுத்தல் என்றும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை என்றும் எமது மக்களின் இயல்பு வாழ்வு முற்றுமுழுதாகப் பாதிப்படைந்துள்ளது.

புலிகளைக் கைதுசெய்தல் அல்லது தாக்குதல் நடத்துவோரைக் கண்டுபிடித்தல் என்ற போர்வையில் அப்பாவி இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டுவருகின்றனர்.

மேலும், புலிகளும் அரசும் செய்து கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையானது இராணுவ இயந்திரத்தின் உயிர்க் கொலைகளிலிருந்து - வீட்டு வேலிகளை வெட்டி அத்துமீறி உட்பிரவேசிக்கும் வரை நீண்டுசெல்கிறது. இதை இனியும் அனுமதிக்கமுடியாது.

எனவே பொங்கி எழும் மக்கள் படையினராகிய நாம் அணிதிரண்டு இராணுவத்தின் இந்தச் செயற்பாடுகளை முழுமையாக எமது மண்ணிலிருந்து அகற்ற முடிவுசெய்துள்ளோம். அந்த அடிப்படையில் பின்வரும் விடயங்களை உடன் நிறுத்தவேண்டும்.

தேடுதல் என்ற பெயரில் இடம்பெறும் சுற்றிவளைப்புகள் உடன் நிறுத்தல்வேண்டும். கைது செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

எமது மக்களின் இயல்பு வாழ்நிலைகளைப் பாதிக்கும் வண்ணம் தருவிக்கப்பட்ட இராணுவமும் படைநிலைகளும் திரும்பப் பெறுதல் வேண்டும்.

புதிய இராணுவ முகாம்கள், காவலரண்கள் அமைத்தல் நிறுத்தப்பட வேண்டும். மக்களின் இயல்பு வாழ்நிலைத் தோற்றத்துக்கான இடையூறாக இருக்கும் இராணுவ இயந்திரமயமாக்கல் தொடருமானால் - வேட்டொலிகளும், குண்டுச் சத்தங்களும், இராணுவப் பிணக்குவியல்களும் உருவாவதை அரச கூலிப் படைகளால் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது என்பதை பேரினவாத அரச கூலிப் படைகளுக்கு அறியத்தருகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நோர்வே வெளிவிவகார...

சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே வெளியுறவு அமைச்சருடன் அமைச்சர் மங்கள சமரவீர கலந்துரையாடுவாரென எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும், சமாதான முயற்சிகளை புதுப்பித்தல் தொடர்பாகவும் அமைச்சர் மங்கள சமரவீர கலந்துரையாடுவாரெனவும் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இந்தச் சந்திப்பில் வெளியுறவு அமைச்சு செயலாளர் பாலிகாகார, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ண மற்றும் கொள்கைத் திட்டப் பணிப்பாளர் சானக ஜெயசேகர ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அதிகரித்துவரும் வன்செயல்களும், அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சமான சூழ்நிலையில் அமைச்சர் மங்கள சமரவீர - நோர்வே வெளியுறவு அமைச்சரை இன்று அவசரமாகச் சந்தித்து கலந்துரையாடுவது முக்கியம் வாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

D.C.M
யாழ்.நகர்
LOGIC
S.R.J சுதன்
மாபெரும் கருத்தரங்கு தொடர்கள் ஐந்து இடம்பெறும்
ஆரம்பம்: 16.12.2005 வெள்ளி 10 a.m.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.